பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாசி 04 வியாழக்கிழமை 21.09.2023 கதிர் 314

# நகைப்புக் காட்டுவதை விட்டுவிட்டு சுயாதீன விசாரணையை நடத்துங்கள்

### கத்தோலிக்கத் திருச்சபை காட்டம்

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிவதாக இருந்தால் ஆட்சியாளர்கள் நகைப்புக்குரிய செயற்பாடுகளைகைவிட்டுவிட்டுசுயாதீனவிசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்று கத்தோலிக்கத் திருச்சபையின் ஊடகப்பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமின பெர்னாண்டோ வலியுறுத்தினார்.

பேராயர் இல்லத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உயிர்த்த தாக்குதல் சம்பந்தமாகத் தெளிவூட்டுவதற்காகப் பாதுகாப்பு அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர். விடயதானத்திற்கு பொறுப்பான ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமதுநாடாளுமன்றப்பிரதிநிதிகளாக மக்களால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்படுபவர்கள் சில நேரங்களில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. ரோம் எரிந்தபோது பிடில் வாசித்துக்கொண்டிருந்த நிரோக்கள் போன்று இவர்களும் இருக்கின்றார்கள்.

இந்த வாரம் நாடாளுமன்ற அமர்வின்போது ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஒரு ஒழுங்குப் பிரச்சினையை நாடாளுமன்றத்தில் கிளப்பினார். சபாநாயகர் இது விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலியரம்புக்வெலவுக்கு ☞ 2

## அச்சுறுத்தல்



ஓமந்தை,சின்னவிளாத்திக்குளத்தில் விவசாயிகளின் ஆர்ப்பாட்டம் குறித்த செய்தியைச் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள்ஓமந்தைப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் அச்சுறுத்தப்பட்டனர் என்று ☞ 8

## டிஜிட்டல் பொருளாதாரத்தின் மூலம் 15 மில்லியன் டொலரை ஈட்ட முயற்சி

டிஜிட்டல்பொருளாதாரத்தைமேம்படுத்துவதன் மூலம் 2030ஆம் ஆண்டளவில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 15 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க எதிர்பார்ப்பதாகஇலங்கை தகவல் தொழில்நுட்ப தொழில்துறை சம்மேளனத்தின் பொருளாளர் இந்திக டி சொய்சா தெரிவித்தார்.

'தேசிய தகவல் தொழில்நுட்ப மாநாடு '2023' குறித்து ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி ஊடகமையத்தில்நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது:

'நிலைபேறான டிஜிட்டல் சமூகத்தை நோக்கி' என்ற தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாக டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கிநகரும் டிஜிகொன் (DIGIECON) 2030 வேலைத் திட்டத்தின் ஊடாக ☞ 2

## சுகாதார சேவைகள் ஆபத்தில் என்பதை வலியுறுத்தி நாளை பெரும் போராட்டம்

### சுகாதார சேவை உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதலைமையிலானஆட்சிக்குஎதிராக நாளைவெள்ளிக்கிழமை பெரும் போராட்டம் நடத்தவுள்ளதாக சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களும் வேறுசில தொழிற்சங்கங்களும் அறிவித்துள்ளன.

'சுகாதார சேவைகள் ஆபத்தில்' என்றதொனிப்பொருளின் கீழ் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளதாக சுகாதார சேவைகள்ஒன்றியத்தின் உறுப்பினர்வைத்தியர்ஜெயந்த பண்டார தெரிவித்தார்.

தேசிய விரோத தினமாக செப்டெம்பர் 22ஐ நாம் பிரகடனப்படுத்துவதுடன், ☞ 8

## மெட்டா அதிகாரியையும் சந்தித்தார் ஜனாதிபதி ரணில்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் நியூயோர்க் மெட்டா (Meta) நிறுவனத்தின் உலகளாவிய விவகாரங்களுக்கானதலைவர் சேர் நிக்கிளெஸ் ஆகியோருக்கிடை யிலான சந்திப்பு நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

இதன்போது, இணையத்தளம் உள்ளிட்டசமூகஊடகங்களில் வெளியிடப்படும்வெறுப்பு பேச்சுக்கள் மற்றும் போலிச் செய்திகளை மட்டுப்படுத்த இலங்கை ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வரும் புதிய நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுத்துக் கூறினார். ☞ 8

## சட்டம் அமுலுக்கு

இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்றையதினம் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக் ஷ தலைமையில் கூடியபோதேஅவர்இந்த அறிவிப்பை விடுத்தார்.

இலங்கைச்சனநாயக சோசலிசக் குடியரசின் அரசமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2023 செப்டெம்பர்19'இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் ☞ 2

## நேபாளப் பிரதமரை சந்தித்தார் ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹாலுக்கும் இடையிலானஉத்தியோகபூர்வ சந்திப்பு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத்தொடரில் பக்க நிகழ்வாக நேற்று நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலானநீண்டகால அரசியல், பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்து இதன்போது இரு ☞ 8

## புதுப்பிக்கத்தக்க மின் ஆற்றலை 75 சதவீதமாக்குவதற்கு திட்டம்

நாட்டின் 70 சதவீத மின்சாரத் தேவையை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தி, மின் கட்டணத்தை குறைக்க திட்டங்கள் வகுக்கப்பட்டுவருவதாக மின்சக்திமற்றும்எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதுப்பிக்கத்தக்கஎரிசக்தி நாட்டின் மிகப்பெரிய ஆற்றல் மூலமாகும். அதனை அபிவிருத்தி செய்வதன் மூலம் எரிபொருளுக் ☞ 2

## மூதூரில் நேற்றுப் போராட்டம் நினைவூர்தி தாக்குதலை எதிர்த்து



திலீபனின் நினைவு ஊர்தியைச் சேதப்படுத்தியமையைக் கண்டித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்மீதுதாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையினைக்கண்டித்தும் மூதூரில் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. ☞ 8

## குளக்கட்டில் கல்குவாரியா? வவுனியாவில் கடும் எதிர்ப்பு

### விவசாயிகள் நேற்று ஆர்ப்பாட்டம்



வவுனியாவில் குளத்தின் அணைக்கட்டில் கல் குவாரி அமைக்கப்பட்டதற்கு எதிராக விவசாயிகள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

வவுனியாமாவட்டம், சின்ன விளாத்திக்குளம் குளத்தின்இயற்கையான அணைக்கட்டினை உடைத்து கல் அகழ்வுப்பணி இடம்பெறுவதற்கு எதிராக கதிரவேலர் பூவரசன்குளம்கமக்காரர் அமைப்பினைச் சேர்ந்த விவசாயிகளே ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஓமந்தை கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு முன்பாக அலுவலகத்தின்வாயிலை பூட்டி அதன் ☞ 8

## தியாகி திலீபன் நினைவு ஊர்திக்கு வவுனியாவில் உணர்வுபூர்வ அஞ்சலி



தியாக தீபம் திலீபன் அவர்களின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்திக்கு வவுனியாவில் நேற்று மக்கள் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தினர்.

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது நினைவேந்தலை முன்னிட்டுதமிழ்தேசிய மக்கள்முன்ன ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

# நிலைபேறான அபிவிருத்தியை அடைவதற்கு உலகின் தற்போதைய நிலை போதுமானததல்ல

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான உலகலாவிய முன்னேற்றத்தின் தற்போதைய நிலை திருப்திகரமானதாக இல்லை என்றும், 12 சதவீத முன்னேற்றத்தை மாத்திரமே தற்போது காண முடிவதாகவும் ஏனைய முக்கியமான இலக்குகளில் 30 சதவீதத்தை இன்னும் அடைந்துகொள்ளவில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை கூட்டத்தொடருக்கு இணையாக நேற்று தொடங்கிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2023 கூட்டத்தொடரில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலும் பெருமளவிலான வளப்பற்றாக்குறை அதற்குத் தடையாக அமைந்துள்ளது.

2020 இல் ஏற்பட்ட கொவிட் நோய்த்தொற்று எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதை தாமதப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், உலகளாவிய பொருளாதார வளர்ச்சி தேக்கமடைந்ததுடன், பல்வேறு துறைகளின் பொருளாதார நடவடிக்கைகள் முழுமையாக முடங்கிப் போயின.

இது ஏற்கனவே நிலவும் உலகளாவிய கடன் நெருக்கடியை அதிகப்படுத்தியது. இந்த சவாலான நிலை, இலங்கை உட்பட மேலும் பல்வேறு நாடுகளை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியது. இந்த சூழ்நிலையில், மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் அபிவிருத்தி இலக்குகளை அடையக்கூடியதாக இருக்கிறதா என்பது இப்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

இலங்கை தொடர்பில் கூறுவதாயின், 2019 ஆம் ஆண்டின் முழுமையான மதிப்பீட்டுக்கமைய, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 9சதவீத முதலீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், கொவிட் தொற்றுநோயால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியும் இந்த இலக்கை அடைவதற்கு பெரும் தடையாக காணப்பட்டது.

இலங்கையின் காலநிலை சுபீட்சத் திட்டத்திற்கு மாத்திரம் 2030ஆம் ஆண்டாகும்போது 26.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவிலான முதலீடுகள் தேவைப்படும். அதனை நிறைவு செய்து கொள்வதும் பெரும் சவாலாகும்.

இக்கட்டான பொருளாதார நெருக்கடி நிலைமை இலங்கைக்கு மாத்திரமின்றி ஆசியா மற்றும் ஆபிரிக்காவின் பல நாடுகளை பாதித்துள்ளதுடன், வங்குரோத்து நிலையிலிருந்து மீளக்கூடிய நிலையிலிருந்த நாடுகள் கூட தற்போதைய நெருக்கடியின் விளைவுகளுடன் போராடுகின்றன.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை நிறைவேற்ற 2030 ஆம் ஆண்டுக்குள் 5.9 டிரில்லியன் நிதியுதவி தேவை என்பதை ஜி-20 உச்சிமாநாடு மீண்டும் உறுதிப்படுத்தியது.

2050 ஆண்டுக்குள் நிகர-பூஜ்ஜிய உமிழ்வை அடைய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 04 டிரில்லியன் வருடாந்த முதலீடு அவசியமாகும்.

பல்வேறு நாடுகளைப் பாதிக்கும் முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி நிலையில், இந்த புள்ளிவிவரங்கள் சாத்தியமா என்பதை விமர்சன ரீதியாக ஆராயுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

புதிய உலகளாவிய நிதிச் சட்டத்திற்கான பெரிஸ் உச்சி மாநாடு நிதி சவால்களை எதிர்கொள்வதற்கான உறுதிப்பாடாக அமையும். எவ்வாறாயினும், உலகளாவிய நிதி மயமாக்கல் இந்த சிக்கலான மற்றும் அச்சுறுத்தலான நிலைமையை வெற்றிகொள்ள தீர்மானமிக்க நடவடிக்கைகளை அவசரமாக மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும் - என்றார்.

## இனி இது .....

எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மான வரைவு மீதான வாக்கெடுப்பின் போது இடம்பெற்ற ஒரு சம்பவத்தையே அவர் பிரச்சினை என்றார். அது என்னவென்றால், அன்றைய விவாதத்திற்கு வந்திருந்த அமைச்சர் ஒருவர் தனது 'கோர்ட்'டை சபா மண்டபத்திற்குள் கழற்றி வைத்துவிட்டார் என்பதுதான். அது நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்குப் புறம்பானது என்பது நளின் பண்டாரவின் வாதம்.

சபா மண்டபத்திற்குள் தமது ஆடைகளைக் களைய எவருக்கும் அனுமதியில்லை. அது சபாநாயகரை அவமரியாதை செய்வதற்கு ஒப்பானது. அமைச்சரைப் போன்யே யாராவது ஒருவர் தனது காற்சட்டையைக் கழற்றினால் அது பொருத்தமானது அல்ல. அது தொடர்பில் கவனிக்க வேண்டிய பொறுப்பு சபாநாயகருக்கும் நாடாளுமன்ற படைக்கல சேவிதருக்கும் உண்டு என்றார் நளின்.

மேற்சட்டைக்கு மேலே போடப்படும் ஆங்கில நாகரிகத்தின் அடையாளமான 'கோர்ட்'யும் காற்சட்டையையும் ஒப்பிட்டு, அதையொரு பிரச்சினையாக்கி நாடாளுமன்ற உறுப்பினர் அதற்கூடாக சபாநாயகரிடம் முன்வைத்த கோரிக்கைதான் விசித்திரமானது.

அப்படிக் 'கோர்ட்'டை கழற்றிப் போட்டு முறையற்ற வகையில் சபா மண்டபத்திற்குள் நடந்துகொண்ட அமைச்சர், நம்பிக்கையில்லாத் தீர்மான வரைவின் மீது அளித்த வாக்கை செல்லுபடியற்றது என்று சபாநாயகர் அறிவிக்க வேண்டும் என்று ஒரே போடாகப் போட்டார் நாடாளுமன்ற உறுப்பினர்.

அந்த ஒரு வாக்கை செல்லுபடியற்றதாக்குவதன் மூலம் நம்பிக்கையில்லாத் தீர்மான வரைவு தொடர்பான முடிவுகளில் எந்த மாற்றமும் வரப்போவதில்லை என்பது தெரிந்திருந்தாலும் இப்படியொரு கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் ஏன் முன்வைத்தார் என்பது இன்னமும் புரியாத புதிராகவே இருக்கின்றது.

நாடாளுமன்றத்திற்குச் செல்வதற்குத் தேசிய, பாரம்பரிய உடை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நாகரிக உடை அணிந்து செல்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஏனோதானோ என்று உடையணிந்து எவரும் அங்கு செல்ல முடியாது. அதற்காகக் 'கோட்டை'க் கழற்றி வைத்ததற்கெல்லாமா அக்கப் போருக்குச் செல்ல முடியும்? மக்கள் நாளாந்தம் எத்தனையோ பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதெல்லாம் பிரச்சினையாகத் தெரிகிறது பாருங்கள்.

உருபட்டிடும் நாடு.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நகைப்புக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முதலில் தெளிவுபடுத்தல்களைச் செய்தவர் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜெயவர்த்தன ஆவார். இவரே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமான அனைத்து தகவல்களையும் கையில் வைத்துக்கொண்டு அதனைத் தடுக்காது இருந்தவராவார்.

இது குறித்த குற்றச்சாட்டு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்டு அந்த ஆணைக் குழுவின் பரிந்துரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு, இவர் மீது குற்றவியல் வழக்கொன்றை தொடுக்குமாறு சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட பரிந்துரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் குறித்த பரிந்துரைகள் இதுவரையில் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

இந்த விடயங்களை மையப்படுத்தி நாம் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்தோம். அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பிலும் தெளிவாக விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் அதுவும் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

இவருக்கு அடுத்தபடியாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தெளிவூட்டல்களை வழங்கியவரும் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான அதிகாரியாகவே உள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக விசாரணைகளை முன்னெடுத்துவந்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ரவி செனவிரத்ன உள்ளிட்ட 20பேருக்கும் அதிகமானவர்களின் பணி இடமாற்றத்தின் பின்னர் அப்பதவிக்கு வருகை தந்தவராக உள்ளார்.

அதுமட்டுமன்றி பிரசன்ன அல்விஸுக்கு எதிராக மற்றுமொரு குற்றச்சாட்டும் காணப்படுகின்றது. குறிப்பாக, லசந்த விக்கிரமதுங்கவின் கொலைக்கு எதிரான சாட்சி ஆதாரங்களை அழித்தவர் என்ற குற்றச்சாட்டுக்களே அவை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தியவர்களைப் பார்க்கும் போது இந்த ஆட்சி எதனை நோக்கமாகக் கொண்டிருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

தயவுசெய்து ஆட்சியாளர்கள் இவ்விதமான நகைச்சுவைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு கேலிக்கூத்தாடுவதைக் கைவிடவேண்டும். உண்மைகளைக் கண்டறிவதற்கான சுயாதீனமான விசாரணையொன்று முன்னெடுக்கப்படவேண்டும் - என்றார்.

## புதுப்பிக்கத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காகச் செலவிடப் படும் பணத்தை நாட்டில் தக்கவைத்துக்கொள்ள முடியும். எரிபொருளுக்காகச் செலவிடப்படும் தொகையைக் குறைப்பதன் மூலம் மின் கட்டணத்தைக் குறைக்க முடியும். மேலும், இந்தப் பணத்தை ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம்.

நாட்டின் 70 சதவீத எரிசக்தி தேவைக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. 2019ஆம் ஆண்டில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தில் அரசு கவனம் செலுத்தத் தொடங்கியது. எனவே 70 சதவீத புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்தி செய்யும் இலக்கை நடைமுறைப் படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போது, கூரைகளில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின்களங்களின் ஊடாக 685 மெகாவோட் மின்சாரமும், நிலத்தில் பொருத்தப்பட்ட சூரிய மின்களங்களினால் 140 மெகாவோட் மின்சாரமும், காற்றாலை மின் நிலையங்களின் ஊடாக 263 மெகாவோர்ட் மின்சாரமும், சிறிய நீர் மின் நிலையங்களினால் 434 மெகாவோர்ட் மின்சாரமும் பெரும் நீர்மின் நிலையங்களின் ஊடாக 1,573 மெகாவோர்ட் மின்சாரமும் தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்கப்படுகின்றன.

சூரியசக்தி மின்நிலையங்கள் மற்றும் காற்றாலை மின் நிலையங்களை இன்னும் அதிகமாக அமைக்கத் தேவையான இடங்களை அடையாளம் காணும் பணியை நிலைபெறு தகு வலு அதிகாரசபை தொடங்கியுள்ளது.

இது தவிர, தற்போது திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் முன்னேற்றத்தை ஆராயவும், அவற்றின் செயல்திறனை சரிபார்க்கவும் இராஜாங்க அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதனுடன், திட்டங்களுக்கு மிகக் குறுகிய காலத்திற்குள் அனுமதி வழங்குவதற்குத் தேவையான நடைமுறைகளைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை இணைப்பதில் ஏற்படும் உறுதியற்ற தன்மையை சமாளிக்க இந்தியாவின் ஊடாக தெற்காசிய மின்சாரக் கட்டமைப்புடன் அதனை இணைக்கத் தேவையான தொடக்கக் கட்டத் திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

எமது நாட்டில் எரிசக்தியை மேம்படுத்த சிறந்த திட்டம் தேவை. அதற்காக 2023 முதல் 2026 வரை ஒரு திட்டத்தையும், 2027 முதல் 2030 வரை அதன் தொடர்ச்சியான திட்டமொன்றையும் மின்சார சபை தயாரித்துள்ளது. அதன் அடிப்படையில் தேவைக்கேற்ப உரிய திட்டங்களை மாற்றி நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

உமா ஓயா திட்டப் பணிகள் பல்வேறு காரணங்களால் தாமதமாகி வருகின்றன. ஆனால் தற்போது அதன் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளது. எனவே, அங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் அடுத்த மாதத்திற்குள் பிரதான மின்கட்டமைப்பில் சேர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர, அணுசக்தியில் இருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகளையும் எமது ஆட்சி ஆராய்ந்துவருகிறது. இதற்குக் காலம் பிடிக்கும். ஆனால் அதற்கான சாத்தியக்கூற்று ஆய்வை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம் - என்றார்.

## சட்டம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(கூட்டிணைத்தல்) (திருத்தம்)' எனும் சட்ட மூலம் சபாநாயகரினால் சான்றுரைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த சட்டமூலம் 2023ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என்ற பெயரில் 2023 செப்டெம்பர் 19 முதல் நடைமுறைக்கு வருகிறது - என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது.

## டிஜிட்டல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் பொருளாதாரத்தை விரைவுபடுத்துவதற்குத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்தின் வழிகாட்டலின் கீழ் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நாட்டில் தொழில்நுட்பத்தை வலுவூட்டுவது குறித்து முன்னுரிமை வழங்கியதற்காக இந்த ஆட்சியைப் பாராட்டுகின்றேன்.

தற்போது அனைவரும் டிஜிட்டல் பொருளாதாரம் பற்றிப் பேசுகிறார்கள். உலகின் முன்னேறிய நாடுகளில் டிஜிட்டல் பொருளாதாரம் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வழங்கப்படும் பங்களிப்பு சுமார் 40 சதவீதமாகும். ஏனைய நாடுகளில் 20 சதவீதமான பங்களிப்பு வழங்கப்படுகிறது. எமது நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரத்தின் மூலம் தற்போது வழங்கப்படும் 5 சதவீதப் பங்களிப்பை 20 சதவீதமாக ஆக உயர்த்தும் இயலுமை எம்மிடம் உள்ளது.

மேலும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தற்போது வழங்கப்படும் பங்களிப்பான 3.7 பில்லியன் அமெரிக்க டொலர்களை 2030 ஆம் ஆண்டிற்குள் 15 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

டிஜிகொன்- 2030 வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக அடுத்த 7 ஆண்டுகளுக்கான வழிகாட்டுதல் தொகுப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது. டிஜிட்டல் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கை மக்களின் தொழிநுட்ப அறிவை மேம்படுத்துவதில் இன்று ஒருசெயலூக்கப் பங்களிப்பின் தேவை உள்ளது.

2030 ஆண்டுக்குள் டிஜிட்டல் பொருளாதார பிரதான திட்டம் மற்றும் கண்காணிப்புக் கொள்கைக் கட்டமைப்பை வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நாட்டில் டிஜிட்டல் பொருளாதாரத்தை விரைவுபடுத்த இது ஒரு முக்கிய காரணியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த ஆண்டு மாநாட்டில் ஆறு முக்கிய நோக்கங்களுடன், முப்பதுக்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச பேச்சாளர்கள் விரிவுரைகளை வழங்க உள்ளனர். நிதித் தொழில்நுட்பம், கல்வித் தொழில்நுட்பம், சுற்றுலாத் தொழில்நுட்பம், தகவல் பாதுகாப்பு, விவசாயத் தொழில்நுட்பம், இலத்திரனியல் சுகாதார சேவைகள் ஆகிய ஆறு தலைப்புகளில் இந்த மாநாட்டை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வுடன் இணைந்து, நாட்டில் உள்ள சிறந்த கணனி வல்லுநர்களுக்கு பரிசுகள் வழங்கவும், கணனித் துறையில் சிறந்து விளங்குபவர்களை பாராட்டவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு மாநாட்டின் தனித்துவமான வேலைத்திட்டமாக டிஜிட்டல் முதலீட்டு மாநாட்டை குறிப்பிடலாம். நாட்டில் உள்ள அனுபவமிக்க தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு சாத்தியமான முதலீட்டாளர்களை அடையாளம் காண்பதையும் தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதியில் 03 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற இலக்கை அடைவதையும் இது நோக்கமாகக்கொண்டுள்ளது. இதற்கு, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனம் வழங்கிய ஆதரவைப் பாராட்ட வேண்டும் - என்றார்.

## நேபாளப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுத்தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள இலங்கை -நேபாள கூட்டு ஆணைக்குழுவின் தொடக்க அமர்வு, அதற்கான மிக முக்கியமான நடவடிக்கையாக அமையும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் எதிர்காலத்தில் வலுவாக முன்னேறும் என நம்பிக்கை தெரிவித்த நேபாள பிரதமர், இரு நாடுகளுக்கும்



இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் நேபாள மக்களுக்கு இடையில் சமய மற்றும் கலாசார ரீதியில் பல்வேறு ஒற்றுமைகள் காணப்படுவதாகவும், இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை விரிவுபடுத்துவதற்கு இது ஒரு சிறந்த காரணியாக அமையும் என்பதையும் இரு தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

மேலும், இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான கல்வி வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம், தனிமனிதர்களுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்துவது மற்றும் சுற்றுலாத் துறையில் உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் இந்தச் சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. பலதரப்பு விடயங்களில் இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் தலை

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

## பயணப் பை சடலம் விவகாரம்:

# தந்தை, இரு மகன்கள் உட்பட அறுவர் கைது

சீதுவஇ தண்டுகம் ஓயாப்பகுதியில் பயணப்பை ஒன்றுக்குள் இருந்து அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் இரு மகன்கள் உட்பட ஆறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி சீதுவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெல்லானவத்தைஇ கிந்திகொட பிரதேசத்தின் தண்டுகம் ஓயாவின் கரையோரப்பகுதியில் பயணப்பொதி ஒன்றுக்குள் ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளதாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

சம்பவத்தின் போது 36 வயதுடைய குடுவெளஇ மஹாவெளபிரதேசத்தைச்சேர்ந்த திருமணமாகாத ஒருவரே உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் இரு மகன்கள் உட்பட ஆறு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரின் மூத்த மகனுக்கு ஜப்பானில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றிய சம்பவத்தின் அடிப்படையில் குறித்த நபர் தாக்கிக்கொலை செய்யப்பட்டுள்ளார்எனப்பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட நபர் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புபெற்றுத்தருவதாகக்கூறி மோசடிசெய்த குற்றச்சாட்டுக்கள் பலவற்றுடன் தொடர்புடையவர் எனவும் மாதம்பைஇகட்டானஇ பண்டாரவளை பொலிஸ் நிலையங்களில்குறித்தநபருக்கு எதிராக பல முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன எனவும்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட நபர் பிரதான சந்தேகநபரின் நண்பர் என்பதுடன் கடந்த 11 ஆம் திகதி கொழும்புஇ புறக்கோட்டை பகுதியில் மேற்படி நபரை சந்தேகநபர்கள் சந்தித்னர் எனவும்இ அதன் பின்னர் அவரை தமது காரில் ஏற்றி வீட்டுக்கு அழைத்துச் செல்வதாகக்கூறி புறப்பட்டுள்ளனர்எனவும்பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டானஇ தகோன்னா பகுதியிலுள்ள சந்தேக நபர்களுக்கு சொந்தமான தென்னைத் தோப்புக்குள் அழைத்துச் சென்றதாகவும் அவர்கள் மூலம் வழங்கப்பட்ட பணத்தை மீள பெற்றுத் தருமாறு கோரி கைகளாலும்இ தடியாலும் தாக்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலுக்கு இலக்கான அவர் உயிரிழந்துள்ளதுடன்இ அவரின்சடலத்தை பயணப்பை ஒன்றுக்குள் இட்டு சீதுவ பகுதியில்விட்டுச்சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சீதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(05)

# திருமலையில் படகு விபத்து; இளைஞன் பரிதாபச் சாவு

திருகோணமலைஇ குச்சவெளி பகுதியில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை - குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செந்தூர் பகுதியில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார் எனக் குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.


இவ்வாறுஉயிரிழந்தவர்குச்சவெளிஇமதுரங்குடா - செந்தூர் பகுதியைச் சேர்ந்த சுரேந்திரன் ஜனுஜன் (வயது 19) எனவும் தெரிய வருகின்றது.

செந்தூர் மதுரங்குடா களப்புப் பகுதியில் மீன் பிடிப்பதற்காக இரு இளைஞர்கள் சென்றபோது குறித்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மேற்படி இளைஞன் உயிரிழந்துள்ளதுடன் மற்றவர் மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பொலிஸாரின் விசாரணையின் பின்னர் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இந்தியா அல்லது சீனாவுடன் இலங்கை கூட்டுச் சேராது

## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்



இந்து சமுத்திரத்தில் அதிகாரச் சமநிலை உருவாகி வருகின்ற போதும், இலங்கை இந்தியாவுடனோ, சீனாவுடனோ கூட்டணி அமைக்காது என்று ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தெரி வித்தார்.

ஐக்கியநாடுகள்பொதுச் சபையின் 78ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக நியூ யோர்க் நகரில் நேற்று நடைபெற்ற கடல் சார் நாடுகளுக்கான 3ஆவதுஇந்து-பசுபிக்தீவு நாடுகளுக்குஇடையிலான பேச்சில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

கார்னகி எண்டோவ்மென்ட் மற்றும் சசகாவா மன்றம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக்கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதான உரை நிகழ்த்தியதோடு, சர்வதேச அமைதிக்கான கார்னகி எண்டோவ்மென்ட் இன் கொள்கை ஆராய்ச்சி தொடர்பான சிரேஷ்ட உப தலைவர் டென் பெயரினால் இது நெறிப்படுத்தப்பட்டது.

இதன்போது, பிரதான உலக வல்லரசுகளுக்கு இடையிலானபோட்டியில் தலையிடுவதற்கு, இந்து சமுத்திர மற்றும் தென் பசுபிக்பிராந்தியத்தின்தீவு நாடுகள்விரும்பவில்லை. இந்த நாடுகள் தமது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடுஉட்படஅவர்களின் முதன்மையான விடயங்களில் கவனம் செலுத்தி, தமது நாடுகளின் இறைமை மற்றும் சுதந்திரத்தைப் பேண முயற்சிக்கப்படுகிறது.

இலங்கை அரசு இந்தியாவுடனோ அல்லது சீனாவுடனோ கூட்டணி அமைக்காது, எல்லாவற்றிற்கும் மேலாக இலங்கையின் நலன்களை முன்னிலைப்படுத்தி நிற்கும். அதேபோன்று, பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளும் தமது நாடுகளின் இறைமைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா உள்ளடக்கிய க்வொட் நாடுகள் மற்றும், சீனாவின் இலக்குகளுடன் தொடர்பில்லாத இந்து சமுத்திரத்தின் மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தின் தீவு நாடுகள் தமது சொந்த முன்னுரிமைகளைக் கொண்டிருக்கிறன. அவற்றை மதிக்கத் தயாராக இருக்கும் எந்தவொரு தரப்பினருடனும் ஒத்துழைப்பைக் கட்டியெழுப்ப இலங்கையும்செயற்பட்டு வருகிறது. சீனாவின் எழுச்சி யானது எபெக் மற்றும்ஆசியான்(APEC & ASEAN) போன்றபிராந்தியகட்டமைப்பிற்குள்ளேயே நடந்ததோடு அதனைப் பல நாடுகள் ஏற்றுக் கொள்கின்றன.அண்மைக் காலமாக இந்தக் கட்டமைப்பிற்கு அப்பால் மாபெரும் வல்லரசுப் போட்டி விரிவடைந்து வருவதால் உறுப்பு நாடுகள் மத்தியில் கவலை தோன்றியுள்ளது.

தெற்கு பசுபிக் சமுத்திரம் மற்றும் இந்து சமுத்திரம் ஆகியவை, பெரும் மூலோபாய மதிப்பைக் கொண்டிருக்கின்றன. தெற்கு பசுபிக் பிராந்தியம் அமெரிக்க கடற்படைக்கு இன்றியமையாத கேந்திர மையமாகும். இரண்டாம் உலகப் போர் காலத்தின் போது இந்து சமுத்திரம் முக்கிய பங்காற்றியது.

பவளக் கடல் மற்றும் மிட்வே போரின் போதும் இரண்டாம் உலகப்போரின் போதும் அமெரிக்கா தனது ஆதிக்கத்தைநிலைநிறுத்தியதும் மற்றும் அட்மிரல் யமமோட்டோவின் விமானத்தை சுட்டு வீழ்த்தியதும் ஹவாய் உட்பட இந்த தென் பசுபிக் பிராந்தியத்தில்தான் என்பது நினைவு கூரத்தக்கது.

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் முக்கியத் துவத்தை குறிப்பிடுவதற்காக வின்ஸ்டன் சர்ச்சிலின் அறிக்கையை மேற்கோள் காண்பிக்கின்றேன். அதற்கு அமைவாக, ‘இலங்கையை கைப்பற்றுவது என்பது இந்து சமுத்திரத்தில் அதிகாரத்தை இழப்பதாகும்’ என்று அவர் குறிப்பிட்டார்.

இந்து-பசுபிக் பிராந்தியத்தின் முக்கியத்துவம், குறிப்பாக சீனாவின் சவால்களால் எடுத்துக்காட்டப்படுகிறது. இது பிராந்திய இயக்கம் மற்றும் ஒத்துழைப்பை மீள் மதிப்பீடு செய்ய தூண்டியுள்ளது.

ஐரோப்பிய சக்திகள் மற்றும் நேட்டோவை தொடர்புபடுத்துவதற்காக ஜி-7 குழு எடுக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு எழுந்ததுடன், பிரான்ஸ் மட்டுமே அதற்கு ஆதரவளித்தது. இந்த சம்பவம் இந்து சமுத்திர ரிம் சங்கத்தின் விதிகளை மீறுவதாகக் கருதப்படுகிறது.

இந்து சமுத்திரத்தின் மேற்பரப்புப் போர் அச்சுறுத்தல்களைக் குறைக்கும் வகையில் நீர்மூழ்கிக் கப்பல் போர் அச்சுறுத்தல்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு இந்து சமுத்திர ரிம் சங்கத்திற்குள் தீர்வு காணப்பட வேண்டும்.

தீவு நாடுகள் தொடர்பிலான பாதுகாப்பு உரையாடல்களை ஏற்றுக்கொள்ள முடியும், அந்த நாடுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவது பொருத்தமானதல்ல. இலங்கை உட்பட பல தீவு நாடுகள் இந்து-பசுபிக் பிராந்தியம் தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடல்களில் ஈடுபடவில்லை. அமெரிக்கா மாலைதீவில் தூதரகமொன்றைத் திறப்பது போன்ற அண்மைக் கால முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

ஆசியான் அமைப்பின் தலையீடு, ரஷ்ய-உக்ரைன் போர் மற்றும் பிறிக்ஸ் பிளஸ் அமைப்பின் உருவாக்கம் ஆகியவற்றின்காரணமாகஇந்து சமுத்திரத்தில் அதிகார சமநிலைஉருவாகிவருகிறது. இந்த மாறும் பூகோள நோக்கு, தீவு நாடுகளின் சுதந்திரத்தைப் பேணுவதற்கு ஆதரவளிப்பதுடன், மேலும் இந்து சமுத்திர ரிம் சங்கம், ஆசியான்மற்றும்பிறிக்ஸ் ஆகிய அமைப்புகளுக்கு இடையே வலுவான ஒத்துழைப்பைப் பேண வேண்டும் -என்றார்.

# கொழும்புத் துறைமுக நகர உரிமத்தை ரணிலே இலங்கைக்கு உரித்தாக்கினார்

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



மஹிந்த ராஜபக்ஷவால் சீனாவுக்கு வழங்கப்பட்ட கொழும்பு துறைமுக பொருளாதார நகரத்தின் உரிமத்தை ரணில் விக்கிரமசிங்கவே 99 வருட காலத்துக்கு புதுப்பித்து இலங்கைக்கு உரித்தாக்கினார்.

கொழும்புதுறைமுகநகரத்து வழங்கப்பட்டுள்ள விசேட வரிச்சலுகை எதிர்காலத்தில் வணிக நகரம் என்ற இலக்குக்கு பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

கொழும்பு துறைமுக நகரத்தின் செயற்பாடுகளை நல்லாட்சி அரசாங்கம் அரசியல் நோக்கத்துக்காக தாமதப்படுத்தியது என பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டுள்ளதை திருத்திக் கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் தான் துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்துக்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக உள்ள 50 ஏக்கர் நிலப்பரப்பை சீனாவுக்கு எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் உறுதிப்பத்திரம்ஊடாகவழங்கும் வகையில் தான் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை திருத்திக் கொள்வதற்காகவே துறைமுக அபிவிருத்தி நகர செயற்திட்டம் குறுகிய காலத்துக்கு இடைநிறுத்தப்பட்டன.

மஹிந்த ராஜபக்ஷவால் சீனாவுக்கு முழுமையாக வழங்கிய கொழும்பு துறைமுக நகர வலயத்தை அப்போதைய பிரதமர்ரணில்விக்கிரமசிங்க99 வருட கால ஒப்பந்த அடிப்படையில் திருத்தம் செய்தார். கொழும்பு துறைமுக பொருளாதார நகரத்தின் அபிவிருத்தி திட்டங்களை விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களைநாட்டுக்குக்கொண்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது. முன்னாள் நிதி மூலதனச் சந்தை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் நாட்டுக்கு அழைத்து வந்த முதலீட்டாளர் நிதி சலவை குற்றச்சாட்டுக்கு உள்ளாகி வெளிநாட்டில் சிறைத் தண்டனைக்கு உள்ளாக்கியுள்ளார்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் ஒட்டுமொத்த மக்களும் வரி விதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்புதுறைமுகபொருளாதார நகரத்துக்கு வரி சலுகை வழங்கப்பட்டுள்ளது.

துறைமுக நகரத்துக்கு முன்பாக உள்ள சங்ரில்லா ஹோட்டல் உட்பட வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஹோட்டல்களுக்கு சடுதியாக வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் விசேட வரிசலுகைவழங்கப்பட்டுள்ளமை எதிர்காலத்தில்வணிகநகர என்ற இலக்குக்கு பாரிய நெருக்கடிகளைஏற்படுத்தும்-என்றார். (05)

# கடனை குறுகிய காலத்துக்குள் இலங்கை மீளச் செலுத்துமென எதிர்பார்க்கவில்லை

## பங்களாதேஷ் பிரதமர் மகிழ்ச்சி

கடந்த காலத்தில் பங்களதேஷிடமிருந்து இலங்கை பெற்றுக்கொண்டகடனைகுறுகிய காலத்துக்குள் மீளச் செலுத்திவிடும் என எதிர்பார்க்கவில்லை என பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு செவ்வாய்க்கிழமை நியூயோர்க்கில் இடம்பெற்றது.

இதன்போதே மேற்கண்டவாறு பங்களாதேஷ் பிரதமர்ஷேக்ஹசீனாதெரிவித்தார்.

தெற்காசிய பிராந்தியத்தின் நாடுகளாக, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் இரு நாட்டுதலைவர்களும் விரிவாக கலந்துரையாடினர்.

மேலும், கடந்த காலத்தில் பங்களதேஷிடமிருந்துஇலங்கை பெற்றுக்கொண்டகடனைகுறுகிய காலத்துக்குள் மீளச் செலுத்திவிடும் என எதிர்பார்க்கவில்லை எனத் தெரிவித்த பங்களாதேஷ் பிரதமர், அந்த கடனை செலுத்த முடிந்துள்ளதன் ஊடாக இலங்கை பொருளாதார ரீதியில்அடைந்துள்ளமுன்னேற்றம் தெரிகிறது என்பதோடு, அதனை தொடர்ச்சியாக தக்க வைத்துக்கொள்வதன் ஊடாக இலங்கைசுமுகமானநிலைமையை அடைந்துக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

கடந்த சவாலான கால கட்டத்தில் இலங்கைக்கு பங்களாதேஷ்வழங்கியஅசைக்க முடியாதஆதரவிற்காகஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க, பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் பங்களாதேஷ் மக்களுக்கும்தனதுநன்றியைத் தெரிவித்தார்.

இதன்போது, பங்களாதேஷிடம் இருந்து இலங்கைக்கு தொடர்ச்சியாக கிடைத்து வரும் ஆதரவை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, பங்களாதேஷின் பெருந்தன்மைக்கு தனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

முன்னதாகபங்களாதேஷிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் அந்த சந்தர்ப்பத்தை இழந்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இந்த வருட இறுதிக்குள் பங்களாதேஷிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கற்றறிந்தோர் வெளியேற்றம் உடன் தடுக்கப்படவேண்டும்

தற்போதையபொருளாதாரநெருக்கடிமற்றும்அதன்விளைவான அரசியல் நிச்சயமற்ற தன்மையால் கற்றறிந்தவர்களின் வெளியேற்றம் தீவிரமடைந்துள்ளது. ஒருபுறத்தில் இந்தப் அறிவுப் புலம்பெயர்வு தீவிரமடைந்திருக்கையில் நாட்டின் தலைவர்கள் பல புதிய துறைசார் பல்கலைக்கழங்களை நிறுவுவது தொடர்பில் அறிவித்து வருகின்றனர்.

மருத்துவர்கள்,தாதியர்கள்,தகவல்தொழில்நுட்பவியலாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பொறியியலாளர் என்று புலம்பெயரும் கற்றறிந்தோர் பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது. அதேநேரம் காலநிலை மாற்றத்திற்கானபுதியபல்கலைக்கழகம், தனியார்துறையினரால் நிர்வகிக்கப்படவுள்ள மருத்துவக் கல்லூரிகள் என்று பலவற்றை உருவாக்கப் போவதாக தலைவர்கள் அறிவிக்கின்றார்கள்.

நாட்டின் இளைஞர்கள் மத்தியில் நிலவும் இடம்பெயர்வு போக்கு அல்லது இடம்பெயர்வுக்கான ஏக்கத்தை பொருளாதாரத்தின் மீட்சி மூலம் கட்டுப்படுத்த முடியும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தால் மட்டுமே அது நியாயமானதாக இருக்கும். இல்லையெனில், பல்கலைக்கழகங்கள் போன்ற புதிய உயர்கல்வி நிறுவனங்களை நிறுவுவது என்பது ஓட்டை வாளியில் தண்ணீர் எடுக்கும் முயற்சியாகவே இருக்கும்.

நாட்டின் 80 சதவீத இளைஞர்கள் பிற நாடுகளுக்கு, குறிப்பாக மேற்கு நாடுகளுக்கு இடம்பெயரத் திட்டமிட்டுள்ளனர் எனவும், இது அவர்களின் வயதான பெற்றோரின் நல்வாழ்வுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் ஒரு கணக்கெடுப்பை மேற்கோள்காட்டி முன்னணி சிங்கள செய்தித்தாள் ஒன்று ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டிருந்தது.

மேற்கூறிய ஆய்வில் கூறப்பட்ட இளைஞர்களின் சதவீதத்தின் உண்மைத்தன்மை என்னவாக இருந்தாலும், பொருளாதார நெருக்கடி நாட்டின் இளைஞர்கள் மத்தியில் எந்த நாட்டிற்கும் செல்வதற்கான ஒரு வெறியை உருவாக்கியுள்ளதை உணர முடிகின்றது. கடந்தசிலஆண்டுகளைவிட இந்தஆண்டுவெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக முறைப்படி அரச நிறுவனங்களில் பதிந்து செல்வோரின் எண்ணிக்கையே பல மடங்கு உயர்ந்துள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மைய இரண்டு நிகழ்வுகளின் போது இலங்கையின் உயர்கல்வி வசதிகளின் மூளை வடிகால் மற்றும் விரிவாக்கம் ஆகிய இரண்டைப் பற்றியும் தொட்டார். இரத்தினபுரி சீவாலி மத்திய கல்லூரியின் மாணவர் நாடாளுமன்றத்தில் செப்டெம்பர் 6 நடைபெற்ற சந்திப்பின் போது, நாட்டில் 10 புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கும் இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் உள்ள இலங்கை மாணவர்களுக்கு கல்விக் கடன்கள் மூலம் உயர்கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்கும் தமது திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார். அவரது திட்டங்களால் பயனடையப்போகிறவர்களில் எத்தனை பேர் நாட்டில் தங்கியிருப்பார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இதேபோல், செப்டம்பர் 15 அன்று கியூபாவின் ஹவானாவில் நடந்த ஜி–77 மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி, இலங்கையின் மனித வள இளப்பிற்காக, அதிலும் கற்றறிந்தவர்களின் மனிதவள இழப்பிற்காக மேற்கு நாடுகளிடம் இழப்பீடுகளைக் கேட்கவேண்டியிருக்கிறது என்றார். மூளை வடிகால் என்று அவர் அதனை விளித்தார்.

மூளை வடிகால் என்பது பல தசாப்தங்களாக இலங்கையில் ஒரு பிரச்சினையாக உள்ளது, அது தீர்க்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், வெளிநாட்டில் வாய்ப்புகள் இருந்தபோதிலும், வளர்ந்த நாடுகளில் ஊதியங்கள் மற்றும் வசதிகள் இலங்கையில் இருந்து வெகு தொலைவில் இருந்தபோதிலும், பல தொழில் வல்லுநர்கள் மற்றும் திறமையான ஆண்களும் பெண்களும் நாட்டை விட்டு வெளியேற விரும்பவில்லை என்பதும் மதிக்கப்படவேண்டியது.

இங்குள்ள ஒப்பீட்டளவில் உயர்ந்த வாழ்க்கை முறையின் அடிப்படையில் அவர்கள் அனுபவித்த சமூக அந்தஸ்தைத் தவிர, இலவசக் கல்வி என்று அழைக்கப்படுபவற்றின் மீதான நன்றி உணர்வு மற்றும் உள்ளூர் கலாச்சாரத்தால் வளர்க்கப்பட்ட குடும்பத்தின் மீதான பற்று ஆகியவையே அவர்களின் வெளியேற்றத்தைத் தடுத்துள்ள என்று கருதலாம். ஆனால் இதுவும் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்கிற பெரும் கேள்வி உண்டு.

இவ்வாறு இடம்பெயர்தல் என்பது இளைஞர்கள், படித்தவர்கள் அல்லது படிக்காதவர்கள், திறமையானவர்கள் அல்லது திறமையற்றவர்கள் மத்தியில் ஒரு ஏக்கமாக மாறிவிட்டது. இது ஒரு தீய சுழற்சி.


இலங்கை தனது மனித மூலதனத்தை இழப்பதென்பது அதன் பொருளாதாரத்தைப் பெருமளவில் பாதிக்கிறது, அரசியல் தலைவர்கள், வல்லுநர்கள், பொதுமக்கள் மற்றும் ஊடகங்கள் என அனைத்து சம்பந்தப்பட்டவர்களாலும் தீர்க்கப்பட வேண்டிய தேசிய நெருக்கடி இது.

இந்தப் பிரச்சினைக்கு கற்றறிந்தோர் வெளியேறிச் செல்லும் நாடுகளிடம் இருந்து இழப்பீடு பெறுவதென்பது கண்ணுக்கெட்டிய தூரத்தில் நடக்கக்கூடிய காரியமல்ல. இந்த யோசனை வளரும் நாடுகளுக்குப் பொருத்தமானதும் அதனால் கற்றறிந்தோர் வெளியேற்றத்தைத் தடுத்து நாட்டின் அறிவுச் சூழலை மட்டுமல்ல பொருளாதாரத்தையும் பாதுகாப்பதில் இந்த ஆட்சி அதிக கவனம் எடுக்கவேண்டும்.

# ஐயோ பாவம் ரணில்!

## அவருடன் அணி சேர்ந்திருப்பவர்களுக்காக

உபுல் யோசப் பெர்னான்டோ



கியூபா நாட்டின் தலைநகர் ஹவானாவிற்குச் செல்லும் வழியில் துபாய் விமான நிலைய முக்கிய விருந்தினர்கள் தங்குமிடத்தில் காத்திருந்த ரணில் விக்கிரமசிங்க, அங்கு இந்தியாவின் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியைச் சந்தித்தார். அந்தச் சந்திப்புத் தொடர்பில் தனது எக்ஸ் (பழைய ருவிட்டர்) பக்கத்தில் பகிர்ந்திருந்தார் மம்தா பனர்ஸி.

அந்தச் சந்திப்பில் ரணில் அவரிடம் ஒரு நல்ல கேள்வியைக் கேட்டுள்ளார்.

“உங்கள் கூட்டணிக்கு யார் தலைவர்.. நீங்கதானே அம்மா..?”

இப்படித்தான் ரணிலின் கேள்வியை ஊடகங்கள் செய்தியாக வெளியிட்டன.

அது மக்களால்தான் முடிவு செய்யப்படவேண்டும். மக்கள் விரும்பினால் நாம் அந்த இடத்தில் இருக்க முடியும் என்பது மம்தாவின் பதிலாக இருந்தது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை எதிர்க்கும் கட்சிகளில் முக்கியமானது மம்தா பனர்ஜியின் அனைத்திந்திய திரினாமுல் காங்கிரஸ். மோடிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து பரந்துபட்ட கூட்டணியை அமைத்திருக்கும் நிலையில், அந்தக் கூட்டணியின் தலைவராக மம்தா வருவாரா என்பதே ரணிலின் கேள்வி. அந்தக் கூட்டணியின் தலைவர் யார் என்பது இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.



அப்படிப்பட்ட மம்தாவிடம் ரணில் கேட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில், ரணிக்குத்தான் யார் என்பதை உணர்த்தி இருக்கும்.

“நாம் எங்கே இருக்க வேண்டும் என்பதை மக்களே தீர்மானிக்கிறார்கள்...” இதுதான் மம்தாவின் பதில். ஆனால் இன்று ரணில் எங்கே இருக்கிறாரோ அந்த இடம் அவருக்குப் பொதுமக்களால் கொடுக்கப்பட்டதல்ல. அது ராஜபக்ஷக்களால் வழங்கப்பட்டது. ரணிலுடனான உரையாடலில் மம்தா சொல்லாமல் சொன்ன விடயம் என்னவென்றால், பொது மக்கள் விரும்பவில்லை என்றால் எந்தப் பதவியையும் வகிக்க முடியாது என்பதைத்தான்.



ரணிலை அவமதிப்பதற்காக அவர் அப்படிச் சொல்லவில்லை. மீனுக்கு தண்ணீர் தேவைப்படுவது போல அரசியல்வாதிக்கு மக்கள் ஆதரவு இருக்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு கூறியுள்ளார். அவள் சொல்வதை ரணில் புரிந்து கொண்டிருந்தால், ராஜாபக்ஷவின் மீன் தொட்டியில் வாழாமல், ரணில் பொதுக் கடலில் குதித்து தனது அரசியல் எதிர்காலத்தைக் காப்பாற்றியிருப்பார்.

‘‘ரணில் பொதுக் கடலில் குதிப்பாரா?’

அதற்காகத்தான் அவர் வாக்காளர்களின் ஆதரவுத் தளம் உள்ள கட்சி ஒன்றைத் தேடுகின்றார்.

“அதற்கு ஏன் மொட்டு...?”

அண்மையில் மொட்டுக் கட்சியின் தலைவர் ஒருவரைச் சந்திக்க கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சென்றிருக்கின்றார்.

“எங்கள் ஜனாதிபதி வேட்பாளர் யார் சேர்...” என்று மொட்டுக் கட்சித் தலைவரிடம் கேட்டுள்ளார்.

“மூன்றெழுத்துக்காரர் ஒருவர்தான் மொட்டுவின் வேட்பாளர் என்கிறார்கள். அது யாருடைய பெயர்...?” என்றும் கேட்டார்.

பதிலளித்த மொட்டுக் கட்சித் தலைவரோ ”6 மாத காலத்திற்கு முன்னர் ரணிலுக்கு மக்கள் மத்தியில் இருந்த அங்கீகாரம் இப்போது உள்ளதா..?” என்று பதில் கேள்வி கேட்டுள்ளார்.

”இப்போது உயிர் வாழ்வதே கஷ்டமாகிவிட்டது என்று மக்கள் திட்டித் தீர்கிறார்கள் சேர்....’’ என்றார் அந்த இளம் நாடாளுமன்ற உறுப்பினர்.

“அதேதான்...! இப்போதைக்கு ரணில் ஓர் அரசியல் தற்கொலைக் குண்டு. அதை வயிற்றில் கட்டிக்கொண்டு அரசியல் ரீதியாக நம்மை நாமே கொல்ல முடியாது...” என்றார் மொட்டுக் கட்சித் தலைவர்.

பொது ஜன பெரமுன (மொட்டுக் கட்சி) தலைவர் அந்தக் கருத்தைச் சும்மா சொல்லவில்லை. ரணிலின் ஊடகவியலாளர்களின் கூற்றுப்படி, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெல்வதற்கான கூட்டணியை அமைக் கும் பொறுப்பு நிமல் லான்சாவிடம் ஒப்படைக்கப்பட்டது. மொட்டுக் கட்சி தனக்கு வேட்புமனுவை வழங்காது என்பதை அறிந்துள்ள ரணில், புதிய கூட்டணியை அமைக்கும் பணியை லான்சாவிடம் ஒப்படைத்தார்.

நிமல் லான்சாவுக்கு 40 அல்லது 50 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது என்று கூறப்படுகின்றது. இன்னும் ஓரிரு நாட்களில் அவர் கூட்டணி அமைப்பார் என்று ரணிலின் ஊடகங்கள் செய்திகளை விதைத்து வந்தாலும், இதுவரையில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்கூட்ட நிமல் லான்சாவின் கூட்டணியில் இணைவோம் என்று உறுதி கூறவில்லை. லன்ஸா இந்த விடயத்தைச் சொதப்பிய காரணத்தால், இப்போது அந்தப் பணிக்குத் தலைவராக நாடாளுமன்ற உறப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பாவை நியமித்துள்ளார் ரணில். ரணிலின் ரீ கொத்தா செய்தி ஊடகங்கள் இந்தச் செய்தியை வெளியிட்டன

“நிமல் லான்சா என்பர் யார்...?”

நிமல் லான்சா, 1997 தேர்தலில் நீர்கொழும்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாநகர சபை உறுப்பினராக இருந்தார். அதன் பின்னர் மாகாண சபைக்குப் போட்டியிட்டு மாகாண சபை அமைச்சராக பதவி வகித்தார். 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றம் வந்தார். இவருக்கு முன்னர் நீர்கொழும்பு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளராக இருந்வர் சரத்குமார குணரத்ன. அவர் 1994 இல் நீர்கொழும்பில் நாடாளுமன்றத் தேர்தலில் வென்றார். ஆனால் நிமல் லான்சாவால் ஒருபோதும் நீர்கொழும்பு ஆசனத்தை வெல்ல முடியவில்லை.

மகிந்த ஜனாதிபதியாக இருந்தபோது, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிமல் லன்ஸா வீட்டிற்கு விசே அதிரடிப் படையினரை அனுப்பினார். போதைப்பொருள் இருக்கிறதா எனச் சோதிப்பதற்காகவே அவர்களை அனுப்பினார்.. அப்போது லான்சாவை பஸில் ராஜபக்ஷ காப்பாற்றினார். அங்குதான் லான்சா பஸிலுடன் நெருங்கிப் பழகத் தொடங்கினார்.

பசிலுடன் நெருக்கமாக இருந்த போதிலும் 2015 பொதுத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினரான லான்சா, மைத்திரி - ரணில் ஆட்சியில் இணைந்து இராஜாங்க அமைச்சர் பதவியைப் பெற்றார். 2017இல் மீண்டும் மைத்திரி - ரணில் அரசில் இருந்து விலகி பஸிலுடன் இணைந்தார். நிமல் லான்சாவின் கடந்த காலத்தைப் பார்க்கும்போது, அவர் ஓர் இடத்தில் இருக்கும் பாத்திரம் அல்ல. கிடைக்கும் பலாபலன்களின் அடிப்படையில் கூட்டணியை மாற்றிக் கொள்ளும் குணம் கொண்டவர். அவர் உள்ளூர் அரசியல்வாதி.

“”அப்படியானால் யார் இந்த அனுர பிரியதர்ன யாப்பா...?”

(5ஆம் பக்கம் பார்க்க...)

# அம்பாந்தோட்டை வர்த்தக துறைமுகத்தை சீன இராணுவ தளமாக முத்திரை குத்தாதீர்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

அம்பாந்தோட்டை வர்த்தகத் துறைமுகத்தை சீன இராணுவத் தளமாக முத்திரை குத்துவது தொடர்பில் இலங்கை கவலை அடைவதோடு திருகோணமலை துறைமுகம் இந்தியாவின் ஒத்துழைப்புடன் அபிவிருத்திசெய்யப்படுகின்றது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக நியூயோர்க் நகரில் நேற்று நடைபெற்ற கடல்சார் நாடுகளுக்கான 3 ஆவது இந்து-பசுபிக் தீவு நாடுகளுக்கு இடையிலானபேச்சுவார்த்தையில் கலந்துகொண்டபோது அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில்எழுப்பப்பட்டகேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டை வர்த்தகத் துறைமுகத்தை சீன இராணுவத் தளமாக முத்திரை குத்துவது தொடர்பில் இலங்கை கவலையடைகிறது. இந்தியாவுடன் இணைந்து திருகோணமலைத் துறைமுகத்தை இலங்கை அபிவிருத்தி செய்து வருகிறது. சர்வதேசஅரங்கில்இந்தவிடயத்தை முன்வைக்க விரும்புகின்றேன்.

இந்திய மற்றும் பசுபிக் சமுத்திரங்களுக்கு இடையேயான தொடர்பை இனங்கண்டு, இரு பிராந்தியங்களின் சிறிய தீவு நாடுகளுக்கிடையில் செயலூக்கமானஒத்துழைப்பைமுன்னெடுக்க வேண்டும். 'இந்து-பசுபிக்' கருத்தியலுக்கு இந்து சமுத்திர ரிம் சங்கத்தின் தேவை அதிகளவில் இருக்கிறது.

இந்து-பசுபிக் பிராந்தியத்தில் பெரும் வல்லரசுப் போட்டி நிலவிய போதிலும், இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக் பிராந்தியத்தில் தீவு நாடுகளின் சுதந்திரம், அவற்றின்உள்ளகவிவகாரங்களில் தலையிடாமை, அவர்களின் தனிப்பட்ட முன்னுரிமைகளின் பாதுகாப்பதற்காக பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் - என்றார்

# பியர் அருந்தியோருக்குத் தர்ம அடி 2 தலாத்துஓயா பொலிஸார் கைது

தலாத்துஓயாகுருதெனிய வீதியிலுள்ளகடையொன்றில் பியர்அருந்திக்கொண்டிருந்த இருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் தலாத்துஓயா பொலிஸில் கடமையாற்றும் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள்ஒருவரும்கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களான இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களாலும் தாக்கப்பட்ட இருவரும் பேராதனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குருதெனிய வீதியிலுள்ள கடை ஒன்றில் திங்கட்கிழமை இருவர் பியர் அருந்திக் கொண்டிருந்தனர். இதன்போது தலாத்துஓயா பொலிஸின் ஊழல் ஒழிப்புப் பிரிவினர் அந்த இடத்துக்குச்சென்று குறித்த இடத்தில் பியர் குடிக்கக் கூடாது என இருவரையும் எச்சரித்துள்ளனர்.

இதன்போது, இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து, கான்ஸ்டபிள் மற்றும் சார்ஜன்டும் தடி மற்றும் மண்வெட்டியால் இருவரையும் தாக்கினர் எனப் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்தே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். (05)

# ஐயோ பாவம் ரணில்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அனுர யாப்பா 1994 முதல் 2005 வரை சந்திரிகாவின் ஆள். அதன் பிறகு மகிந்தவின் ஆள் ஆனார். 2014 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் பொது வேட்பாளராக மைத்திரி நியமிக்கப்பட்டதையடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் செயலாளர் பதவிக்கு ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அநுர பிரியதர்ன யாப்பவை நியமித்தார் மஹிந்த. . 2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரியின் கதவுகளைத் தட்டினார்.

2015ஆம் ஆண்டு மைத்திரி ஜனாதிபதியான போது மைத்திரியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக ஏற்று மைத்திரி - ரணில் ஆட்சியில் அமைச்சரானார் யாப்ப. 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மைத்திரியுடன் இருந்தபோதே மஹிந்தவுடன் டீல் போட்டு மைத்திரியை கட்சித் தலைவர் பதவியில் இருந்து அகற்றக் காரியமாற்றினார். இதனை அறிந்த மைத்திரி அவரைக் கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து நீக்கினார். ஆனால் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ரணில் வெற்றிபெற்றார். அனுரயாப்பாபின்னர் மைத்திரியுடன் சேர்ந்து அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டார். மஹிந்தவை கைவிட்டார்.

2018 ஆம் ஆண்டு மஹிந்த மீண்டும் வெற்றித் தலைவரான போது மஹிந்தவுடன் இணைந்து கொண்டார். அதே ஆண்டு ஏப்ரல் 04 பொதுஜன பெரமுன, மத்திய வங்கியின் பிணைமுறி மோசடிக்கு ரணில்தான் பொறுப்பு என்றுகூறி அவருக்குஎதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்த போது அதை ஆதரித்தவர் யாப்ப.

அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் மைத்திரி - ரணில் ஆட்சியில் அமைச்சர்களாக இருந்த மஹிந்த அமரவீர, சரத் அமுனுகம, நிமல் சிறிபாலடிசில்வா, துமிந்ததிஸாநாயக்க உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 26 அமைச்சர்கள் நடுநிலை வகித்தனர். ஆனால் அநுர பிரியதர்ன யாப்பா நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தார். ரணிலை வெளியேற்றும் நம்பிக்கையில்லா வாக்கெடுப்புக்கு ஆதரவாக மகிந்தவுடன் இணைந்து நின்றார்.

"இவ்வாறான கடந்த காலத்தைக் கொண்ட நிமல் லான்சலவும், அனுர பிரியதர்சனும் எப்படி ரணிலோடு சேர முடிந்தது?"

அநுர பிரியதர்ன யாப்பா அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துப் பொது எதிரணியை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடினார்.

அதுரணிலின்ஆட்சிக்குஎதிரானது. அது நவம்பர் 14, 2022 நடந்தது. எனினும், ரணிலை மீண்டும் ஜனாதிபதியாக்கும் கூட்டணியின் தலைமைப் பொறுப்பை இன்று அனுர பிரியதர்சன யாப்ப ஏற்றுக் கொண்டுள்ளார். இவ்வாறான உள்ளூர் அரசியல்வாகளைக்கொண்டுஇலங்கை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது சாத்தியமற்றது. 1982இல் பிரேமதாஸவைக் கட்சியில் வைத்துக்கொண்டே ஜே.ஆர். வெற்றிபெற்றார். கூரே மற்றும் ரஞ்சனைக்கட்சியில்வைத்துக்கொண்டே பிரேமதாசா வெற்றி பெற்றார்.

அனுருத்த ரத்வத்த, எஸ்.பி.திஸநாயக்க, மங்கள ஆகியோரைக் கட்சியில்வைத்துக்கொண்டேசந்திரிகா வெற்றிபெற்றார். மங்கள, பஸில்மற்றும் ஜே.வி.பியையும்வைத்துக்கொண்டே மகிந்த வெற்றிபெற்றார். ரணில், மங்கள, சந்திரிகா ஆகியோருடன் மைத்திரிபால வெற்றி பெற்றார். மகிந்த மற்றும் பஸிலுடன் கோத்தா வெற்றி பெற்றார்.

ஆனால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றிபெற அவருடன் சேர்ந்திருப்பவர்களைப் பார்க்கும்போது, ஐயோ பாவம் ரணில்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee
Chikne Fried Rice with Vegetable
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# திலீபனின் ஊர்தி சிங்கள இடங்களை ஊடுருவியது நல்லிணக்கக் குலைவே

## இப்படி சொல்கிறார் கிழக்கு ஆளுநர் செந்தில்



(அபு அலா)

தியாகி திலீபனின் நினைவு ஊர்திப் பேரணி சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசத்தை ஊடுருவிச் சென்றமை நல்லிணக்கத்தைக் குலைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்.

நாட்டின் நல்லிணக்கத்தை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு ஆளுநர் என்ற வகையில் தனக்கு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

திலீபனின் நினைவேந்தல் ஊர்வலம் நாடாளுமன்ற உறுப்பினரால், பொலிஸ் அனுமதி இன்றி, சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசத்தை ஊடுருவி சென்றது. இது இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை இல்லாமல் ஆக்குகிறது.

தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அதி கவனத்துடன் செயற்படவேண்டிய பொறுப்பு உள்ளது. அப்பொறுப்பில் அவதான குறைவாக செயற்படுவது நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைப்பதுடன், சட்ட ஒழுங்கையும் பாதிக்கின்றது.

எதிர்காலத்தில் நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் எந்தவொரு செயற்பாட்டையும் அரசியல் கட்சிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் - என்று தெரிவித்தார்.

தீலீபனின் ஊர்தி மீதான தாக்குதல் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மீதான தாக்குதல் ஆகியன தொடர்பாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்குத் தான் பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

# கொழும்பு துறைமுக நகரத்தில் பெட்டிக்கடைகள் அமையாதீர்

## பாட்டலி சம்பிக்க ரணவக்க விமர்சனம்



இலங்கை வங்குரோத்து நிலைஅடைந்துள்ளது. ஆகவே நாட்டுக்கு வரும் முதலீடுகள் குறித்து விசேட கவனம் செலுத்தவேண்டும்.

கொழும்பு துறைமுக நகரத்தில் பெட்டிக்கடைகளை அமைக்காமல் ஆரம்பத்தில் வகுத்த திட்டங்களை மாற்றமில்லாமல் செயற்படுத்த வேண்டும்.

கொழும்பு துறைமுக நகரத்துக்கு சீனா மாத் திரம் முதலிடவில்லை. இலங்கையும் அதிகம் நிதியை முதலிட்டுள்ளது. ஆகவே இந்த விடயத்தில் ஆட்சியாளர்கள் தொழில்நுட்ப ரீதியில் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

கொழும்புதுறைமுக நகரம் தொடர்பான உண்மை, பொய் ஆகியவற்றை நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். 2002 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசாங்கம்' மீண்டெழும் இலங்கை' தொடர்பான கொள்கைக்கு அமைவாகவே துறைமுக நகரம் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தில் உள்ள அவசியமற்ற முனையங்கள், கட்டடங்கள் ஆகியவற்றை நீக்கி துறைமுகத்துக்குள் துறைமுக நகரத்தை உருவாக்குவதற்கு ஆரம்பத்தில் யோசனை முன்வைக்கப்பட்டது. தெற்கு துறைமுக அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் தெற்கு கடற் பகுதியில் இருந்து வடக்கு கடற் பகுதிக்கு மணல் இழுத்துச் செல்லும் வேகம் அதிகளவில் காணப்படுவதால் கொழும்பு துறைமுகத்தை அண்மித்த பகுதியில் மணல் மேடுகள் தோற்றம் பெறும் சூழல் காணப்படுவதாக தேசிய ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டதைத் தொடர்ந்து துறைமுகத்துக்கு அப்பாற்பட்ட வகையில் கொழும்புதுறைமுக நகரம் உருவாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டு இறுதி காலாண்டுபகுதியில் கொழும்பு துறைமுகநகரத்தின் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அபிவிருத்தி பணிகள் தொடர்ந்ததன் பின்னர் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறான பின்னணியில் 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்ப்பட்டதன் பின்னர் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழுவை நியமித்தார்.

கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திப் பணிகளை துறைமுக அதிகார சபை முன்னெடுக்க முடியாது என அந்த குழு அறிக்கை சமர்ப்பித்ததை தொடர்ந்து துறைமுக நகர நிர்மாணப் பணிகள் தொடர்பான அதிகாரங்கள் நகர அபி விருத்தி அமைச்சுக்கு பொறுப்பாக்கப்பட்டன. எமது அமைச்சின் கீழ் அதிகாரங்கள் கிடைக்கப் பெற்றவுடன் 2014 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் முழுமையாக மறுசீரமைக்கப்பட்டன.

கொழும்பு துறைமுகத்தின் ஏகபோக உரிமை 2014 ஆம் ஆண்டு சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையை மாற்றி கொழும்பு துறைமுக நகரத்தின் முழு உரிமையையும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பொறுப்பாக்கி நாட்டின் இறையாண்மையை நல்லாட்சி அரசாங்கம் பாதுகாத்தது என்பதைப் பகிரங்கமாக குறிப்பிட முடியும்.

முறையாக சுற்றாடல் தரப்படுத்தல் ஏதும் இல்லாமல்தான் 2014 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுக நகரத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆட்சி மாற்றத்தின் பின்னர் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சுற்றாடல் தொடர்பில் தரப்படுத்தலை மேற்கொண்டு நிர்மாணப் பணிகளை முன்னெடுத்தோம். முறையான சுற்றாடல் தரப்படுத்தலை மேற்கொள்ளாமலிருந்திருந்தால் ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு கட்டடம் உட்பட கொழும்பு துறைமுகத்தை அண்மித்த பகுதியில் உள்ள பாரம்பரியமான கட்டடங்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கும்.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4 பிரதான முதலீட்டாளர்களை கொழும்பு துறைமுகநகரத்துக்குகொண்டு வர உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தோம். 52 நாள் அரசியல் நெருக்கடி, உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் ஆகிய சம்பவங்களால் அனைத்து முயற்சிகளும் பலவீனப்படுத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு துரதிஷ்டவசமாக நாட்டைக்காக்க கோட்டபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார். இறுதியில் நாடு வங்குரோத்து நிலையடைந்தது.

இலங்கை வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. ஆகவே நாட்டுக்கு வரும் முதலீடுகள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும். கொழும்புதுறை முகநகரத்தில் பெட்டிக்கடைகளை அமைக்காமல் ஆரம்பத்தில் வகுத்த திட்டங்களை மாற்றமில்லாமல் செயற்படுத்த வேண்டும். கொழும்புதுறைமுகநகரத்துக்கு சீனா மாத்திரம் முதலிடவில்லை. இலங்கையும் அதிகம் நிதியை முதலிட்டுள்ளது. ஆகவே இவ்விடயத்தில் அரசாங்கம் தொழினுட்ப ரீதியில் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவேண்டும். - என்றார்.

(05)

## ஜனாதிபதியும் இணைவு

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக, நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் திங்கட்கிழமை ஆரம்பமான 'நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளுக்கான மாநாடு - 2023' இல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இணைந்துகொண்டார்.

2030 ஆம் ஆண்டளவில் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தை அடைவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய நடவடிக்கைகள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது.

இந்த நிகழ்வில் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, சர்வதேச புரிந்துணர்வுக்கான வர்த்தக கவுன்ஸில் மற்றும் அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 'இலங்கையில் பொருளாதார வாய்ப்புகள்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற வர்த்தக வட்டமேசை கலந்துரையாடலிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்துகொண்டார்.

இலங்கையில் முதலீடு மற்றும் வர்த்தக வாய்ப்புகள் பற்றி ஆராயும் அமெரிக்காவில் உள்ள 40 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் இலங்கையில் உள்ள தனியார் துறையின் உயர்மட்ட வர்த்தக பிரதிநிதிகள் மற்றும் அமெரிக்க அரசாங்கத்தின் சிரேஷ்ட பிரதிநிதிகளும் இந்த வட்ட மேசை கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (05)

# சஹ்ரானை மிகுந்த திறமைசாலியான ஒருவர் இயக்கினார் புலனாய்வு பிரிவினர் செயற்பட்ட விதம் குறித்து சந்தேகம்

## சி.ஐ.டியின் முன்னாள் தலைவர் பரபரப்புத் தகவல்

உயிர்த்தஞாயிறு தாக்குதலிற்கு முன்னரும் பின்னரும் புலனாய்வு பிரிவினர் செயற்பட்ட விதம் சந்தேகத்திற்கிடமானதாகக் காணப்பட்டதாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற வேளை சிஐடிக்கு பொறுப்பாக காணப்பட்ட அதிகாரி சிரேஸ்ட பொலிஸ்மா அதிபர் ரவிசெனிரட்ண தெரிவித்துள்ளார்.

டிஎன்எல் தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புலனாய்வு அமைப்புகள் மற்றும் புலனாய்வு முகவர்களின் நடவடிக்கைகள் குறித்து பல கேள்விகள் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு தலைமை வகித்த ஜஹ்ரான் ஹாசிமை கட்டுப்படுத்திய மற்றுமொரு நபர் காணப்பட்டார்.

அந்த நபர் மிகவும் புத்திசாலி - இலங்கையில் முதலாவது ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதலை ஒருங்கிணைக்கும் திறன் அவரிடம் காணப்பட்டது - விடுதலைப் புலிகள் கூட அதனைச் செய்யவில்லை என செனிவரட்ண தெரிவித்துள்ளார்.

சஹ்ரான் ஹாசிம் முறையான கல்வியறிவற்ற ஒருவர். அவருக்கு அவ்வாறான ஒருங்கிணைந்த தாக்குதலை மேற்கொள்வதற்கான திறமையிருந்திருக்காது எனவும் குறிப்பிட்டுள்ளார். அவருக்கு மேல் யாரோ இருந்தார்கள் -மிகவும் திறமையும் பயிற்சியும் அனுபவமும் மிக்க ஒருவர் அவரிடம் ஒருங்கிணைந்த தாக்குதலிற்கு பலரை ஒருங்கிணைக்கும் திறன் இருந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் இராணுவ புலனாய்வு பிரிவினர்களுக்கு ஜஹ்ரான் ஹாசிமை தெரிந்திருந்தது.

அவர்கள் அவருடன் இணைந்தும் செயற்பட்டுள்ளனர். தாக்குதலுக்கு முன்னரும் தாக்குதலின் போதும் அதன் பின்னரும் அவர்கள் இணைந்து பணியாற்றியுள்ளனர் எனவும் சிஐடியின் முன்னாள் தலைமை அதிகாரி பேட்டியில் தெரிவித்துள்ளார். வவுணதீவில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டமைக்கு முன்னாள் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களே காரணம் என்ற கருத்தை உருவாக்குவதற்கு புலனாய்வு பிரிவினர் கடுமையாக முயற்சித்தனர். அவர்கள் சில ஆதாரங்களைத் திட்டமிட்டு உருவாக்கினார்கள். இது குறித்து சிஐடிக்கு பெரும் சந்தேகம் காணப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்தஞாயிறுதாக்குதலிற்கும் ஐ.எஸ்.அமைப்பிற்கும் தொடர்புள்ளதா என கண்டறிவதற்கான விசாரணைகளை தேசிய புலனாய்வு பிரிவின் இன்ஸ்பெக்டர் பண் டார முன்னெடுத்தார். எனி னும் இந்த விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டன. ஐஎஸ் அமைப்பிடமிருந்து ஜஹ்ரானிற்கு உதவிகள் கிடைத்தன என்பதற்கான ஆதாரங்கள் எவையுமில்லை.

தேசிய புலனாய்வுப் பிரிவின் தற்போதைய தலைவர் சுரேஸ் சாலேக்கும் சிஐடியினருக்கும் சுமுகமான உறவு காணப்படவில்லை. சனல் 4 இன் குற்றச்சாட்டு குறித்து விசாரணைகள் இடம்பெறவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

## நேபாளப்....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

வர்கள் கலந்துரையாடினர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் உட்பட இலங்கை மற்றும் நேபாளத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## குளக்கட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாக நின்று விவசாயிகள் போராடினர்.

சின்ன விளாத்திக் குளம் குளக்கட்டு இயற்கையாக கற்பாறைகளை

கொண்டமைந்திருக்கும் நிலையில் 12 அடி நீரை சேமிக்க கூடிய சிறு நீர்ப்பாசனக்குளமாகக் காணப்படுகின்றது. இந்த நிலையில் குறித்தகுளப்பகுதியில்கடந்த5 மாதங்களுக்குமுன்கல்குவாரி அமைக்கப்பட்டு கல் அகழ்வு இடம்பெற்றுவருகிறது.இந்தக் கல்குவாரியால் குளம் பாதிக்கப்படுவதுடன் மற்றும் விவசாயமும் பாதிக்கப்படும் எனத் தெரிவித்து வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களம், வவுனியா பிரதேச செயலாளர்,ஓமந்தைபொலிஸ் நிலையம் என்பவற்றில் முறைப்பாடு செய்தனர். இதையடுத்து கல் அகழும் பணி நிறுத்தப்பட்டிருந்தது.

15 நாட்களுக்கு முன்பு அங்கு மீண்டும் கல் அகழ்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த அகழ்வுப் பணிகளால் குளத்தின் அணைப்பகுதி சேமாகியுள்ளதாகவும் இனி அதனைச் சீர்செய்வது கடினம் என்றும் குளத்தில் நீரைச் சேமிக்க முடியாத நிலை ஏற்படுகிறது எனவும் தெரிவித்தே விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் குதித்துள்ளனர்.

இந்தப் பாதிப்புக்களால் 200ஏக்கர்விவசாய நிலத்தில் பயிர்ச்செய்கையைக்கைவிட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலைப்பட்டனர்.

கல்குவாரி அமைத்துள்ளவர்கள் மேலிடத்தில் இருந்து அனுமதியை பெற்று வருவதால் தாம் எதுவும் செய்யமுடியாதுள்ளதாக வவுனியா அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் என்பதால் தமக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லைஎன்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

போராட்ட இடத்திற்கு வந்த ஓமந்தை பொலிஸார் ஆர்ப்பாட்டத்தினை கைவிடுமாறு தெரிவித்ததை அடுத்து விவசாயிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

அதன் பின்னர் கல் அகழ்வுப் பணிகளை இடைநிறுத்துவதாக உறுதியளித்த பொலிஸார், கல் அகழ்வு இடம்பெறும் பகுதியையும் சென்று பார்வையிட்டனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதிக்குவருகைதந்தகமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் ஓமந்தை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் விவசாயிகளுடன் கலந்துரையாடி குளத்தின் அணைப்பகுதியைச் செப்பனிட்டுத் தருவதாகவும் உறுதிமொழி அளித்தனர்.

(100)

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்து வைத்திய சாலைகள்முன்னிலையிலும் இந்தப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித்துக்கு இதுதொடர்பில் விளக்கமளித்துள்ளோம். நாட்டின் சுகாதாரத்துறையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் தான் நன்கு அறிந்துள்ளார் என்று அவர் கூறியதுடன், எமது போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் கூறியுள்ளார்.

நாட்டு மக்களையும் சுகாதாரக் கட்டமைப்பையும் பாதுகாக்கும் நோக்கில் போராட்டங்களை நடத்த நாம் எதிர்பார்த்துள்ளோம். சுகாதார நிலைமைகள் எவ்வாறு உள்ளன என நாட்டு மக்களுக்குத் தெரியும். அவற்றுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக சுகாதார கட்டமைப்பில் உள்ளபிரச்சினைகள்குறித்து எடுத்துக் கூறினோம். ஆனால், மக்களின் சுகாதாரம் தொடர்பில் அவர்களுக்கு துளியளவும் அக்கறையில்லை.

அரசியல்வாதிகளுக்கு இந்த வைத்தியசாலை கட்டமைப்பு அவசியமில்லாவிடினும் நாட்டு மக்களுக்கும் இது அவசியமாகும். ஆகவே, நாளை இந்த ஆட்சியாளர்களுக்கு மீண்டுமொருமுறை தெளிவாக இந்த விடயத்தை உணர்த்த உள்ளோம் - என்றார்.

அதேநேரம், இலங்கை தொழிற்சங்க கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எஸ்.டி.மெதிவத்த தெரிவிக்கையில், நாட்டு மக்கள், விவசாய, கல்விசார், சுகாதாரத்துறை மற்றும் நாட்டின் பல்வேறு துறைசார் தொழிற்சங்கங்களின்ஆதரவு இந்தப் போராட்டத்துக்கு வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மக்களின் சுகாதாரத்தை பாதுகாக்க அனைவரும் ஆளும்தரப்பின் மோசமான செயல்பாடுகளுக்கு எதிராக அணி திரள வேண்டும் - என்றார்.

## திலீபனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னியின் ஏற்பாட்டில் ''திலீபன் வழியில் வருகின்றோம்'' என்னும்ஊர்திப்பவனியானது அம்பாறை மாவட்டம் பொத்துவிலில்தொடங்கியது. 6 ஆவதுநாளான இன்று வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் ஊர்தி பவனி வந்தது.


காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், வெளிநாட்டு பிரஜைகள், வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் ஊர்தியை வரவேற்று மலர்தூபி அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன்வவுனியாவின் நெடுங்கேணி,புளியங்குளம், ஓமந்தை, வவுனியா நகரம், குருமன்காடு,தாண்டிக்குளம், பம்மைமடு, வைரவ புளியங்குளம், திருநாவற்குளம் உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் குறித்த ஊர்தி சென்ற நிலையில் அங்கும் பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் உணர்வெழுச்சியுடன்தியாக தீபத்திற்கு மலர்தூபி அஞ்சலி செலுத்தினர்.

(100)

## மூதூரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



திருகோணமலை மாவட்டம்,மூதூர், புளியடியில் மாலை 4 மணியளவில் தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில்இந்தப்போராட்டம் இடம்பெற்றது. மூதூர் பாலநகர்ச் சந்தியில் இருந்து கையில் பதாதைகளை தாங்கியவாறும் எதிர்ப்புக் குரல் எழுப்பியவாறும் ஊர்வலகமாகப் புறப்பட்ட போராட்டக்காரர்கள் புளியடிச் சந்தி, மணிக்கூட்டு கோபுரம்வரைசென்றுஅங்கு கவனவீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்திமீதுதாக்குதல் நடத்தியதுமாத்திரமல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள்மீதும் தாக்கு தல் நடத்தியமை கண்டனத்துக்குரியது என்றும் இந்த விடயத்தில்சர்வதேச சமூகமும் அக்கறையுடன் செயற்படவேண்டும்என்று வலியுறுத்தியும் குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், ''மீண்டும் 56இல் இலங்கையா?'' ''எம் இனத்துக்காக இறந்தவர்களை நினைவுகூற அனுமதி கொடு'', ''பாரத தேசம் மட்டுமல்ல சர்வதேசத்திற்கே அகிம்சையை போதித்த பெரும் மகான் தியாக தீபம் திலீபன்'', போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பதாதைகளைத் தாங்கியிருந்தனர்.

## அச்சுறுத்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



முறைப்பாடுபதியப்பட்டுள்ளது.

ஊடகவியலாளரின் கடமைக்கு இடையூறு விளைவித்து, அவர்களை அச்சுறுத்தினார் என்று ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீது இந்தக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டம் ஓமந்தை, சின்ன விளாத்திக்குளம் பகுதியில் உள்ள குளத்தின் அருகில் கல் குவாரி அமைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் நேற்று ஓமந்தை கமநல அபிவிருத்தி நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அது குறித்த செய்தி சேகரிக்க அங்கு சென்றிருந்த ஊடகவியலாளர்கள், ஆர்ப்பாட்டத்தின்போது பொது மக்களை அச்சுறுத்தும் வகையில்ஓமந்தைபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி செயற்பட்டதனை ஒளிப்பதவு செய்தனர். இதைக் கண்ட அவர், ஊடகவியலாளரின் ஒளிப்பதுவுக் கருவியைத் தட்டிவிட்டதுடன் ஊடகவியலாளரையும் அச்சுறுத்தித் தாக்க முயன்றார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அங்குநின்றஏனைய ஊடகவியலாளர்களும், விவசாயிகளும் பொலிஸ் அதிகாரியுடன் முரண்பட்டதையடுத்து அவர் அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரிடம் வவுனியா ஊடக அமையம் முறைப்பாடு செய்துள்ளனர்.

(100)

## மெட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது தொடர்பில் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ள உத்தேச சட்டமூலத்தின் மூலம் பற்றி விவரித்த ஜனாதிபதி, அதன் மூலம்பாதிக்கப்பட்டதரப்பினர் உயர் நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

மேலும், நாடாளுமன்றக் குழு மீளாய்வின்போதும் இந்தச்சட்டமூலம்தொடர்பில் மேலதிக திருத்தங்களை மேற்கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி விக்ரமசிங்க தெரிவித்தார். செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத் துறை மேம்பாட்டிற்கான இலங்கையின் திட்டங்கள் தொடர்பில்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விரிவாக விளக்கமளித்தார்.

செயற்கை நுண்ணறிவு துறையில் இலங்கையும் மெட்டா நிறுவனமும் சாதகமான பங்குதாரர்களாக செயற்படுவது தொடர்பில் ஆராயவும், இலங்கைப் பல்கலைக்கழகங்களின் அபிவிருத்திக்காக மெட்டா நிறுவனத்துடன் ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தைஉருவாக்கவும்சந்திப்பில்பரிந்துரைக்கப்பட்டது.

காலநிலை மாற்றத்தைத் தணிப்பது தொடர்பில் தரவுகளை அடிப்படையாக கொண்ட வேலைத் திட்டங்களை மேம்படுத்துவதற்காக நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்களுக்கு செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தும்அதேவேளை கல்விதுறைதொடர்பில்விசேட அவதானம்செலுத்திஇந்நாட்டு செயற்கை நுண்ணறிவு துறையை மேம்படுத்துதல் உள்ளிட்ட இரு விடயங்கள் தொடர்பில் தான் அவதானம் செலுத்தியிருப்பதாகவும்ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

காலநிலை மாற்றம் தொடர்பிலானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர்சமன்ஏக்கநாயக்க, முதலீட்டுச் சபை தலைவர் தினேஷ்வீரக்கொடி, சர்வதேச அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் பணிப்பாளர் தினுக் கொலம்பகே உள்ளிட்டவர்களும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

# வவனியாப் பல்கலையிலும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி



வவுனியா பல்கலைக் கழகத்தில் தியாக தீபம் திலீபன் அவர்களின் அஞ்சலி நிகழ்வு நேற்று இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் 6 நாட்களாகத் தொடர்ந்து திலீபன் நினைவஞ்சலி இடம்பெற்றுவரும் நிலையில் வவுனியாவிலும் நிகழ்வு இடம்பெற்றது.

தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகப் பகுதிகளிலும், புலம்பெயர் தேசங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் தியாக தீபன் திலீபன் பட்டினிப் போராட்டம் இருந்த 6 ஆம் நாள் நேற்று. வவுனியா பல்கலைக் கழகத்தில் அவருடைய திருவருப்படம் பொறித்த பதாகை காட்சிப்படுத்தப்பட்டு மலர்தூபி அஞ்சலி செலுத்தப்பட்டது. (100)

# உளவளத்துணை கூட்டம்





(வி.ரி. சகாதேவராஜா)

சிறுவர் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்குறைப்புமற்றும்உளவளத்துணை தொடர்பான கூட்டம் கிழக்கு மாகாணம், மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னத்தின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற நிகழ்வில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கருத்துக்கள் பகிரப்பட்டதுடன், எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

குறிப்பாக சிறுவர் இடை விலகலைக் கட்டுப்படுத்தல். சிறுவர் பாதுகாப்பு மிகுந்த நிலையான குடும்பச்சூழலை உருவாக்குதல். சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் தராதரங்களைக் கண்காணித்தல். பல்துறை சார்ந்த ஒருங்கிணைப்புகளை பலப்படுத்தல், பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான சட்ட ரீதியான பாதுகாப்பை பெற்றுக் கொடுத்தல், குடும்ப வன்முறைகளைக் குறைப்பது தொடர்பில் கையாளப்படவேண்டிய



விடயங்கள் உளநல பாதிப்புற்றோர் தொடர்பில் கையாளப்படவேண்டிய நடவடிக்கைகள் எனப்பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சத்தியகௌரி தரணிதரன் மற்றும் வலயக் கல்வி அலுவலகம், பொலிஸ் திணைக்களம், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் முகாமையாளர்கள், கிராம சேவை உத்தியோத்தர்கள்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏனைய துறை சார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# மாற்றுத் திறனாளிகள் குறித்த புதிய சட்டம் ஆண்டிறுதியில்

## வரும் என்கிறார் இராஜாங்க அமைச்சர்

மாற்றுத்திறனிகள் தொடர்பான புதிய சட்டம் ஒன்று இந்த ஆண்டு இறுதிக்குள் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வரப்படும் என்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 4% பேர் மாற்றுத்திறனாளிகளாக இருக்கின்றனர். அவர்களுக்கு நிதியுதவி மற்றும் ஏனைய வசதிகளை வழங்கவும் எமது ஆட்சி நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், தொழில்நுட்பம் மூலம் அவர்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்திற்கும் அவர்களின் பங்களிப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நாட்டின் ஆளும் தரப்பாக, மாற்றுத்திறனாளிகளை வலுப்படுத்த நாம் எதிர்பார்க்கின்றோம். அதன்படி, குறிப்பாக மாற்றுத்திறனிகள் தொடர்பான புதிய சட்டமூலத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றவும் எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் எப்போதும் அரசில் தங்கிவாழும் நிலையை மாற்றவேண்டும். எனவே, அவர்களை சமூக ரீதியாக வலுப்படுத்த ஆளும் தரப்பு என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சட்டத்தின் மூலம், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், சமூகத்தில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை உறுதிப்படுத்து-வது உட்பட, அவர்களை வலுப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் கல்வி மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும்.

அதற்குத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் பாடசாலை வசதிகளை வழங்கு-வதும் அவசியம். மாற்றுத்திறனாளிகள் என்று அவர்களை வேறுபடுத்திப் பார்க்காமல் ஏனையவர்களுடன் இணைத்து இந்தத் திட்டத்தை செயல்படுத் தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சைகை மொழிச் சட்டம் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மொழியாகும். எனவே இந்தமொழியைஅனைவராலும் அடை யாளம் காணக் கூடிய வகையிலும், கருத்துகளை பரிமாறிக்கொள்ளும் வகையில் தொடர்பாடல்களை ஏற்படுத்த மாற்றுத்திறனாளிகள் செயலகம் மூலமாக, சைகை மொழி சட்டமூலத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் திருத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாற்றுத்திறனாளிகளுக்காக சர்வதேச அளவிலான சுற்றுலா நிகழ்ச்சியொன்றை டிசெம்பர் மாதத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கொழும்பில் தொடங்கி கண்டி வரை விசேட தொடருந்து மூலம் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்வதற்கு அவசியமான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அளுத்கம கடற்கரைப் பகுதியில் விசேட கலாசார நிகழ்ச்சிகள், ஒரு நாள் செயலமர்வுகள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, விசேடமாக மாற்றுத்திறனாளிகள் சமூகத்தை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகின்றார். வழமையான சமூக நலன்புரி நன்மைகளுக்கு மேலதிகமாக, வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்விஉதவித்தொகையின் கீழ் இதுவரை வழங்கப்பட்டு வந்த 10,000 ரூபா உதவித்தொகையை இந்த ஆண்டு முதல் 20,000 ரூபாயாக அதிகரிக்கவும், சுய தொழில் உதவியாக வழங்கப்பட்ட இருபத்தைந்தா-யிரம் ரூபா கொடுப்பனவை நாற்பத்தைந்தாயிரம் ரூபாவாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

150,000 ரூபாய் வீடமைப்புக் கொடுப்பனவு 250,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையின் பேரில், மாற்றுத்திறனாளிகள் சமூகத்தினருக்கான நலன்கள் மற்றும் சலுகைகளை அதிகரிப்பதற்கு அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. மாற்றுத்திறனாளிகள் தங்கள் வீடுகளுக்குள் அடைத்து வைக்கப்படக்கூடாது. அவர்களும் சமூகத்தில் சமமாக பழகு-வதற்குத்தேவையானசூழலைத் தயார் செய்ய வேண்டும்.

அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். அரச சேவை மற்றும் தனியார் சேவையில் அவர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டத்திற்கு மாற்றுத்திறனாளிகளின் பங்களிப்பும் தேவை.

நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்திற்கு அவர்களையும் பங்கேற்கச்செய்ய முடியும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு தேசமாக வலுவடைந்து நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டிய நேரம் வந்துவிட்டது - என்றார்.

# நான் இந்திய ஆதரவாளனோ சீன ஆதரவாளனோ அல்லன்

## இலங்கை ஆதரவாளன் என்கிறார் ரணில்



நான் இந்திய ஆதரவாளனோ அல்லது சீனஆதரவாளனோ அல்லன். இலங்கை ஆதரவாளன்எனஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சில காலத்திற்கு முன்னர் என்னை, ஒருவர் நான் சீன ஆதரவாளனா இந்திய ஆதரவாளனா எனக் கேட்டார் நான் அதற்கு உறுதியாக நான் இந்தியஆதரவாளன்அல்லன் எனத் தெரிவித்து சீன ஆதரவாளன் அல்லன் எனவும் தெரிவித்தேன் எனக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கு அந்த நபர் நீங்கள் நடுநிலைவாதியா எனக் கேட்டார். நான் அதற்கு நடுநிலைவாதியும் அல்லன். இலங்கை ஆதரவாளன் எனக் குறிப்பிட்டேன் எனத் தெரிவித்துள்ளார்.

வல்லரசுகளின் அல்லது பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளின்முன்னுரிமைக்குரிய விடயங்கள் இலங்கையின் முன்னுரிமைக்குரிய விடயங்கள் இல்லை என்பதை பலர் புரிந்து கொள்ளவில்லைஎனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்திலும் தென்பசுபிக்கிலும் இலங்கை தீவு வலிமை மிக்க நாடுகளிடையே-யான மோதலில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பவில்லை என்பதை தனது கருத்துக்களில் ரணில்விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இந்த நாடுகள் சமூக பொருளாதார சூழல் பாதுகாப்பு போன்ற விடயங்களில்தங்களின் முன்னுரிமைகளைக் கொண்டுள்ளன தங்களின் இறைமையையும் சுதந்திரத்தையும் மதிக்கவேண்டும் என விரும்புகின்றனஎனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் தென்பசுபிக்கில் உள்ள தீவுகள் குவாட் அல்லது சீனாவிற்கு புறம்பான முன்னுரிமைகளை கொண்டுள்ளன எனத் தெரிவித்துள்ளஇலங்கை ஜனாதிபதி தனது தன்னாட்சியை மதிக்கும் எவருடனும் இலங்கை இணைந்து செயற்பட தயாராகவுள்ளதுஎனவும் தெரிவித்துள்ளார். (05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

### உள்ளூராட்சி மன்றங்களில் 3 வருடங்களாகப் பணியாற்றும்

# வெளிவாரி ஒப்பந்தப் பணியாளர்கள் 406 பேருக்கு நியமனம் வழங்குங்கள்

### நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வலியுறுத்து

வடக்கு மாகாணத்தில் ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் தொடர் சேவையில் ஈடுபட்டு வரும் 406 வெளிவாரிப் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சுகாதாரத் தொழிலாளர்களாகவும், வேலை வெளிக்களத் தொழிலாளர்களாகவும் 180 நாட்களைக் கடந்தும் தொடர்ச்சியாகக் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கைகள் நாடுமுழுவதும் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கில் முன்று வருடங்களாகப் பணியாற்றிவரும் வெளிவாரிப் பணியாளர்கள் இந் நியமனத்திற்குள் உள்ளீர்க்கப்படாததால் மிகமோசமான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடயமாக வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் அவரால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 406 வெளிவாரித் தொழிலாளர்களது விவரப்பட்டியலை இணைத்து ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள தனித்தனிக் கடிதங்களிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைப்பரப்பினுள் அடங்கும் திண்ம, திரவக் கழிவகற்றல், பொதுச் சந்தைகள் மற்றும் குத்தகை நிலையங்களின் மேற்பார்வை, வரி அறவீடு, காவற்கடமை உள்ளிட்ட இடர்மிகு பணிகளை ஏராளமான சமூகச் சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் செவ்வனே நிறைவேற்றி வந்த இத்தொழிலாளர்கள், என்றோ ஒரு நாள் தமக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே நீண்டகாலம் தொடர்ச்சியாக கடமையாற்றி வருகின்றனர்.

ஆளணி முகாமைத்துவத்தை இலகுபடுத்தும் நோக்கில் வடக்கு மாகாணசபையில் நடைமுறையிலுள்ள தீர்மானத்தின் அடிப்படையில், குறித்தவோர் உள்ளூராட்சி மன்றத்தின் நிர்வாக எல்லைக்குள் இயங்குகின்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் உள்ளிட்ட சமூகமட்ட நிறுவனங்களும் உள்ளூராட்சி மன்றங்களும் செய்துகொண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே மேற்குறித்த 406 வெளிவாரித்தொழிலாளர்களும் உள்ளூராட்சி மன்றங்களின் ஒப்பந்தப் பணியாளர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இவர்களுக்கான தினவரவுப் பதிவு, மாத வேதனம், விடுமுறை உள்ளிட்ட சலுகைகள், உரிமைகள் அனைத்தும் அந்தந்த உள்ளூராட்சி மன்றத்தினாலேயே நிர்வகிக்கப்படுகின்றபோதும், வெளிவாரி அடிப்படையில் கடமையாற்றும் இவ் ஊழியர்களை நிரந்தர நியமனத்தில் உள்ளீர்ப்பதில் நிர்வாக இடர்பாடுகள் இருப்பதாகக்கூறியிருப்பது ஏற்புடையதல்ல.

அவர்களது நிரந்தர நியமனம் நிராகரிக்கப்பட்டுள்ளமை, உள்ளூராட்சி மன்றங்களை முழுமையாக நம்பியிருந்த அத்தொழிலாளர்களையும் அவர்களது குடும்பங்களையும் வாழ்வாதார ரீதியான பிடிமானங்களற்று அந்தரிக்கும் நிலைக்குக் கொண்டுவந்துள்ளது.

எனவே, இது விடயமாக தாங்கள் உயரிய கரிசனை செலுத்தி உள்ளூராட்சி மன்றங் களில் நிலவும் அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளுக்கு நியமனம் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ், வெளிவாரி அடிப்படையிலான (Out Source) ஒப்பந்தப் பணியாளர்களாக வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் 406 தொழிலாளர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க ஆவனசெய்வதன் மூலம், அவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் வாழ்வளிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன் - என்று அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (113)

## ராஜபக்ஷ யுகத்தை மீளகொண்டுவர முயற்சிக்கும் சிங்களக் காடையர்கள்

### சிவமோகன் சுட்டிக்காட்டு



தியாகி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய மக்கள் அஞ்சலி ஊர்தியையும், ஊர்தியோடு பயணித்தவர்களையும் தேசிய கொடி தாங்கிய சிங்கள காடையர்களால் மிருகத்தனமாக கொலை வெறியோடு தாக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு -

தமிழர்களுக்கு எதிரான பயங்கரவாத வன்முறை அரசியலை இனவாதிகள் தொடர்ந்தும் செய்ய விரும்புகின்றார்கள் என்பதையே தாக்குதல் வெளிப்படுத்துவதோடு, மீண்டும் ராஜபக்ஷ யுகத்தை கொண்டுவரவே இந்த சிங்கள காடையர்கள் முயல்கின்றார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. இந்நாட்டில் தமிழர்கள் அஹிம்சை வழியிலும் வாழ முடியாது என்பதை சர்வதேசமும் உணர்ந்திருக்கும் என நம்புகின்றோம்.

தாக்குதல் தொடர்பில் காட்சிகளின் பதிவு சமூக வலைத்தளங்களில் போதுமான சாட்சியாக இருக்கும் போது ஐவர் மட்டும் கைது செய்யப்பட்டமை ஏன்? திலீபன் மக்கள் அஞ்சலி ஊர்தி பயணத்தை ஆரம்பத்திலிருந்து அரச புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக முன்னும் பின்னும் பயணித்ததை நாம் அறிவோம். எல்லா பொலிஸ் நிலையங்களுக்கும் இது தெரியும்.

அவ்வாறு இருக்கையில் எந்தெந்த இடங்களில் தாக்குதல் நடத்தப்படும் என பொலிஸார் அறிந்திருந்தும் அதைத் தடுக்க முன் ஏற்பாடு செய்யாதது ஏன்? தாக்குதல் நடத்தியவர்களை பொலிஸார் தமக்கே உரிய பாணியில் தடுக்க முயற்சிக்காதது ஏன்?

இந்தத் தாக்குதல் திட்டமிட்ட அரச பயங்கரவாதத்தின் கோரம் என்பதே உண்மை. தமிழர்களுக்கு எதிராக இனவாத நோக்கில் வரலாற்றில் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டவர்கள், தாக்குதல் நடத்தியவர்கள் நீதியின் முன் நிறுத்தி தண்டனை பெறுவார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. அவ்வாறே நீதிமன்றக் குற்றவாளிகளாக அடையாளம் கண்டாலும் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் வெளியில் வந்து விடுவார்கள். இது கடந்த கால எமது அனுபவம்.

திலீபன் உணர்வாளர்கள் மீது நடத்தப்பட்ட கொடூர கொலை வெறி தாக்குதல் தமிழ் மக்களின் உள்ளத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. தாக்குதல் நடத்திய சிங்களக் காடையர்கள் மீதும் அரசின் மீதும் அரசின் பாதுகாப்பு கட்டமைப்பின் மீதும் கோபம் கொண்டுள்ளனர்.

எனவே தமிழ் அரசியல் தலைவர்கள் யாருக்காகவும் அரசியல் செய்யாது தமிழர் தேசத்திற்காக, மக்கள் அரசியல் செய்ய திலீபன் நினைவேந்தல் வாரத்தில் உறுதி கொள்வோம். அதனை நாட்டின் பேரினவாத அரசுக்கும், சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்துவோம் எனத் தெரிவித்துள்ளார். (05)

## மாளிகாவத்தை துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் காயமடைந்தவர் 20 நாள்களின்பின் உயிரிழப்பு

கொழும்பு, மாளிகாவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை சிகிச்சைபெற்றுவந்த நபர் 20 நாள்களின் பின் உயிரிழந்துள்ளார்.

செப்ரெம்பர் 01ஆம் திகதி மாளிகாவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் குறித்த நபர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

உயிரிழந்தவர் 38 வயதான மாளிகாவத்தை பிரதீப் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் குற்றச்செயல்களில் ஈடுபடும் குழு உறுப்பினரும் போதைப்பொருள் கடத்தல்காரரரான 'பஞ்சிகாவத்தே நெவில்' என்பவரின் சகாவும் ஆவார்.

மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் குறித்த நபர் மீது துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் குற்றச் செயல் தொடர்பில் 20 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கொழும்பு குற்றப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

'கெசல்வத்த தினுக' குழுவினால் பழிவாங்கும் நோக்குடன் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (05)

## ரூ. 16 மில்லியன் பெறுமதியான ஹஷிஸ் போதைபொருள் மீட்பு

பெல்ஜியத்தில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலனில் ஒருதொகை ஹஷிஸ் போதைப்பொருளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

16.4 மில்லியன் ரூபா பெறுமதியான ஹஷிஸ் போதைப்பொருளையே ஒருகொடவத்தை கொள்கலன் முனையத்தில் வைத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

வென்னப்புவ, ஹலவத்த பகுதியில் உள்ள முகவரிக்கு குறித்த பொதி அனுப்பப்பட்டுள்ளதுடன் அதில் ஒரு கிலோ 98 கிராம் எடையுடைய ஹஷிஸ் இருந்ததாக சுங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த முகவரி தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகளின் போது முகவரி போலியானது என உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஹஷிஸ் போதைப்பொருள் கையிருப்பு மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## ஹிஸ்புல்லாவின் பல்கலைக்கழகம் நேற்று இராணுவத்தினால் விடுவிப்பு

மட்டக்களப்பு மாவட்டம் ஜெயந்தியாயவில் அமைந்துள்ள பெட்டிகாலோ பல்கலைக்கழகம் நேற்று (புதன்கிழமை) விடுவிக்கப்பட்டுள்ளது.

பலவருடங்களாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த பல்கலைக்கழத்திலிருந்து இராணுவத்தினர் நேற்று வெளியேறியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செவ்வாய்க்கிழமை முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்விடம் பல்கலைக்கழகத்தைப் பொறுப்பேற்குமாறு உத்தரவிட் டிருந்தார்.

அதற்கமைய முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் நேற்று நேரிடியாக விஜயம் செய்து பல்கலைக்கழத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பல்கலைக்கழத்தைப் பொறுப்பேக்கும் நிகழ்வில் கல்குடா அல் கிம்மா நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எம். ஹாரூன் ஸஹ்வி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம். தாஹீர், மௌலவி மும்தாஸ் மதனி உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தப்பல்கலைக்கழகத்திற்கும் முஸ்லிம் நாடுகளே நிதி உதவி வழஙகன என்று தெரிவித்து அரசால் முடக்கப்பட்டதுடன், அது அரச படையினரின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தது. (05)










தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
உலக சுற்றுலா தினம்
2023
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
COMMERCIAL BANK
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
A1
Chrysalis
Catalyzing change
ஊடாக அனுசரணையாளர்:-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

காலைக்கதிர் Kalaikkathir

# பிக்கு கைது

## சிக்கின நிர்வாண வீடியோக்கள்

ராகம பிரதேசத்தில் உள்ள விஹாரை ஒன்றில் வசிக்கும் 19 வயதுடைய பிக்கு ஒருவர், சிறுமிகளின் நிர்வாணப் புகைப்படங்கள் மற்றும் பெரியவர்களுடன் உடலுறவு கொள்ளும் வீடியோக்களை ஆபாச இணையத்தளங்களில் வெளியிட்டு விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் 7 மாதங்கள் முதல் 18 வயது வரையிலான சிறுமிகளின் நிர்வாணப் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் இருந்தன எனவும், அவர்களில் 80 சதவீத மானோர் 10 வயதுக்கு உட்பட்ட சிறுமிகள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட போது, சந்தேக நபரிடமிருந்து மூன்று கணினிகள் மற்றும் 1,500 இற்கும் மேற்பட்ட நிர்வாண வீடியோக்கள் மற்றும் சிறுமிகளின் புகைப்படங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சமூக ஊடக குழுக்களில் சிறுமிகளின் நிர்வாண புகைப் படங்கள் மற்றும் பாலியல் காட்சிகள் பரவுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே கணினி குற்ற புலனாய்வு பிரிவின் சமூக ஊடக குற்ற புலனாய்வு பிரிவினர் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். (05)

# நல்லூரில் தவறவிடப்பட்டவை யாழ். மாநகர சபையின் வசம்

## உரியோர் பெற்றுக்கொள்ளலாம்

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவ திருவிழாக்களின்போது தவறவிடப்பட்ட பெறுமதியான சில பொருள்கள் யாழ். மாநகர சபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும், அவற்றை அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். மாநகர சபை ஆணையாளர் த. ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

மகோற்சவ திருவிழாக்களில் கலந்துகொண்ட பக்தர்களால் தவறவிடப்பட்ட பெறுமதி வாய்ந்த பொருள்கள், ஆவணங்கள், வங்கிப்பரிவர்த்தனை அட்டைகள், பணப்பைகள், மணிக்கூடு, தேசிய அடையாள அட்டை, திறப்புக்கள் முதலியன யாழ்ப்பாணம் மாநகர சபையின் உற்சவ காலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டு, தற்போது மாநகர சபை அலுவலகத்தில் உள்ளன.

இவற்றின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் உரிய அடையாளத்தை உறுதிப்படுத்தி மாநகர சபையின் நிர்வாக கிளையில் பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவித்துள்ளார். (05)

# சிறுமி பாலியல் தவறுக்குத் தூண்டிய 26 வயதுத் திருமணமான நபர் கைது



பதினாறு வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் 26 வயதுடைய திருமணமான ஒருவர் பியகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த யுவதி தனது தாயுடன் பியகம பெரக சந்திய பிரதேசத்தில் உள்ள விடுதி அறையில் தற்காலிகமாக தங்கியிருந்த நிலையில், திருமணமான இந்த இளைஞர் குறித்த சிறுமியுடன் பாலியல் உறவைப் பேணி வந்துள்ளார் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், சந்தேக நபர் சிறுமி விடுதியில் இருக்கும்போது அவர் மீது இந்தக் குற்றத்தை செய்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இவர்கள் இருவரும் ஹற்றன் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# பொது இடத்தில் சிறுநீர் கழித்தவரை தடுத்தோர் மீது கற்களை வீசி தாக்கு

களுத்துறை தெற்கு ரயில் நிலையத்தில் ஒரு குழுவினர் நிலைய அதிபர் மற்றும் ஊழியர்களை கற்களால் தாக்கி சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்துள்ளனர் எனக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனக் களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில் நிலைய பொறுப்பதிகாரி செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணியளவில் மது போதையில் வந்த இந்தக் குழுவினர் ரயில் நிலைய சுவரில் சிறுநீர் கழிக்க முற்பட்டபோது அதற்கு ரயில்வே ஊழியர்கள் எதிர்ப்பு தெரிவித்ததே மோதலுக்கு காரணம்.

குறித்தக் குழுவினர் கற்களை வீசி மூன்று பூந்தொட்டிகள் மற்றும் பயணிகள் இருக்கையை சேதப்படுத்தியதாக ரயில்வே ஊழியர்கள் கூறுகின்றனர்.

தலைமையக பொலிஸ் பரிசோதகர் ருவன்விஜேசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (05)

# பயணிகள் இணைப்பை அதிகரிக்க ஸ்ரீலங்கனுடன் எமிரேட்ஸ் ஒப்பந்தம்

எமிரேட்ஸ் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை ஆகிய இரு விமான சேவை நிறுவனங்கள் பயணிகளுக்கான இணைப்பை அதிகரிக்க பரஸ்பர இன்டர்லைன் ஒப்பந்தமொன்றில் செவ்வாய்க்கிழமை கையெழுத்திட்டுள்ளன.

கொழும்பு மற்றும் டுபாய் வழியாக பரஸ்பர வலையமைப்பாக்கங்களில் புதிய தொடக்கத்தை அணுகுவதற்கும் ஒரு பயணச்சீட்டை பயன்படுத்தி பொருள்களை மாற்றுவதற்கும் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எமிரேட்ஸின் பயணிகள் தேர்வு செய்வதற்காக கொழும்பு வழியாக ஸ்ரீலங்கன் விமான சேவையால் இயக்கப்படும் 15 பிராந்திய இடங்களுக்கு இன்டர்லைன் ஒப்பந்தத்தின் ஊடாக செயற்படுத்தப்படவுள்ளது. (05)

# சிறைச்சாலை சார்ஜன்ட் கைது

## பல சந்தேகநபர்களுக்கு அடைக்கலம் அளித்தாராம்

கலபிடமடை, துனுமல சந்தி பகுதியில் ஜூலை 14ஆம் திகதி நபர் ஒருவரை சுட்டுக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபருக்கு தனது வீட்டில் அடைக்கலம் கொடுத்த சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை சார்ஜன்ட் ஒருவர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்குப் பின்னர் சந்தேக நபரான சதுவா, இராஜகிரியில் உள்ள தனது மூன்றுமாடி வீட்டின் இரண்டாவது மாடியில் குறித்த சிறைச்சாலை சார்ஜன்ட் அடைக்கலம் கொடுத்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீட்டில் பல குற்றவாளிகள் தங்கியிருப்பதற்காக சந்தேக நபர் அடைக்கலம் கொடுத்துள்ளமையும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூடு தொடர்பில் சதுவாவை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்து, தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப் படுத்தி வருகின்றனர். (05)

# குடிதண்ணீர் இணைப்புக்களைப் பெற நெடுந்தீவில் 15 குடும்பங்களுக்கு நிதி

## பூமணி அறக்கட்டளை உதவியோடு அன்பளிப்பு









நெடுந்தீவில் 15 குடும்பங்கள் குடிதண்ணீர் இணைப்பைப் பெறுவதற்குரிய கட்டுப்பணம் தலா 15 ஆயிரம் ரூபாப்படி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் பொதுமக்கள் நீண்ட காலமாக எதிர்கொண்டுவரும் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில், கடல்நீரைச் சுத்திகரித்துக் குடிதண்ணீராக்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் மூலம் வீடுகளுக்குக் குழாய்கள் மூலம் குடிதண்ணீர் இணைப்பைப் பெற ரூபா 15 ஆயிரம் செலுத்தப்படவேண்டும்.

இந்தப் பணத்தைச் செலுத்த முடியாத நிலையில் குடிதண்ணீர் இணைப்பைப் பெறாது அல்லல்பட்டு வந்த 15 குடும்பங்களின் சார்பில் பூமணி அறக்கட்டளை நிறுவுனரான வேலணை மேற்கு, சரவணையைச் சேர்ந்தவரும் பிரான்ஸில் புலம்பெயர்ந்து வாழும் வர்த்தகருமான விசுவாசம் செல்வராசாவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி நேற்றைய தினம் உரிய பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்தப் 15 குடும்பங்களும் குடிதண்ணீர் இணைப்பைப் பெறுவதற்காக இரண்டு வருடங்களுக்கு முன்னரே விண்ணப்பித்தபோதும் கட்டுப்பணம் செலுத்த முடியாததால் இணைப்பைப் பெறமுடியாதிருந்தனர்.

பூமணி அறக்கட்டளையின் இலங்கைக்கான செயலாளரும் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான ந.விந்தன் கனகரட்ணம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வர்த்தகரான பிரான்ஸிஸ் சிந்தகுலஜெயம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அறக்கட்டளையின் ஆலோசகர் இ.மயில்வாகனம், அறக்கட்டளையின் நிர்வாக சபை உறுப்பினர் யா.தேவதாஸ், சமூகச் செயற்பாட்டாளரான திருமதி தனீஸ்குமார் நிவேதா ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு நிதி உதவியை வழங்கினர்.

# எமது மீன்பிடி உபகரணங்கள் இந்திய மீனவர்களினால் நாசம்

## மன்னார் மீனவர்கள் குற்றச்சாட்டு



இந்திய மீனவர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான எமது மீன்பிடி உபகரணங்களை சேதப்படுத்தி வருகின்றனர் என மன்னார் மாவட்ட மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் , அந்நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

இந்திய மீனவர்களின் தொடர் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் இலங்கை மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக அண்மைக்காலமாக அதிகரித்து வரும் இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எமது மீனவர்களின் பல லட்சம் ரூபா பெறமதியான மீன் பிடி வலைகளை இந்திய மீனவர்கள் சேதப்படுத்திச் செல்கின்றனர்.

இதன்காரணமாக எமது மீனவர்கள் வெறும்கையுடன் கரை திரும்பும் நிலை ஏற்பட்டு வருகின்றது. அத்துடன் கருவாட்டுக்கு மீன் வெட்டுதல், வலையில் இருந்து மீன்களை அகற்றுதல் உள்ளிட்ட வேலைகள் செய்து வரும் பெண்களும் தமது வேலை வாய்ப்பை இழந்துள்ளனர்.

இலங்கை கடல் பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் நுழைந்து மீன் பிடித்துச் செல்லும் வரை கடற்படையினர் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை.

எனவே இவ்விடத்தில் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மன்னார் மாவட்ட மீனவர்கள் உள்ளடங்களாக வடக்கு மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்து மீறல்களால் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்' எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(05)

# வங்குரோத்து நிலையிலிருந்து மீளும்போது வெறுப்பும் கோபமும் ஏற்படவே கூடாதாம்

## வஜிர அபேவர்த்தன புத்திமதி



வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டை மீட்டெடுக்க தவறுகளை திருத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டிய வேளையில் அந்தப் பயணத்தில் வெறுப்பும் கோபமும் கலந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது என நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

நாடு வங்குரோத்து அடைந்தமைக்கானகாரணம் குறித்து விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தாம் வெளியிட்ட அறிக்கையை திரித்து நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளை அவமதிக்கும் வகையில் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டமைக்கு தாம் வருத்தம் தெரிவிப்பதாக வஜிர அபேவர்தன குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தில் பல தடவைகள் நாட்டின் நிலைமையை விளக்கியதாகவும், எந்தவொரு நிதியமைச்சு அதிகாரியின் பெயரையும் தாம் குறிப்பிடவில்லை எனவும் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

வங்குரோத்து அடைந்த நாட்டை சரியான பாதைக்கு கொண்டு வரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கைகளுக்கு நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் ஆதரவை வழங்கி வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.(05)

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு அமெ. நிதியுதவி!

இலங்கையின் அபிவிருத்திக்காக 19 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்க தீர்மானித்துள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

குறித்த நிதியானது சர்வதேச அபிவிருத்த்திக்கான அமெரிக்க முகவரகத்திற்கும் இலங்கை அரசாங்கத்தும் இடையிலான அபிவிருத்திக்கான உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியுதவியானது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாக அமையும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# இணையத்தை கலக்கும் அமைச்சரின் நடனம்!



அமைச்சர் மனுஷநாணயக்கார இலங்கையில் வசித்துவரும் ஆபிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த சிலருடன் நடனமாடிய வீடியோவானது இணை யத்தில் வைரலாகி வருகின்றது.

இலங்கையில் புத்தளம்-கல்பிட்டி பகுதியில் ஆபிரிக்க வம்சாவளியை சேர்ந்தவர்கள் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# சிவில் விமானப் போக்குவரத்து தொடர்பில் விசேட செயலமர்வு!





இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையால் கிழக்கு மாகாணத்தில் முதன் முறையாக சிவில் விமானப் போக்குவரத்து தொடர்பான செயலமர்வொன்று திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி, ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கான மேலதிகசெயலாலர் இளங்கோவன் உள்ளிட்டபலர் கலந்துகொண்டனர்.

சுற்றுலாத்துறை மற்றும் சிவில் விமானத்துறை என்பன இன்றைய காலகட்டத்தில் பெரிதும் ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையில் மாணவர்கள் மத்தியியில் அது தொடர்பான தெளிவூட்டல்களை வழங்கும் நோக்கிலேயே இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கான மேலதிகசெயலாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார். (05)

# நல்லூரில் அண்ட்ரியா!




இலங்கைக்கு படப்பிடிப்பு ஒன்றுக்காக வருகை தந்துள்ள பிரபல தென்னிந்திய பாடகியும் நடிகையுமான அண்ட்ரியா நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார்.

இதன்போது நல்லூர் கந்த சுவாமி ஆலயத்துக்கு சென்றிருந்த அவர் அங்கு இறைவழிபாட்டிலும் ஈடுபட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் நல்லூரில் எடுத்த புகைப்படங்களை தனது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ள நிலையில் அவை, வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஊழல்வாதியினைக் காப்பாற்றாதே கிளிநொச்சியில் நேற்று போராட்டம்

## குட்டையைக் குழப்பாதே என எதிர்த் தரப்பும் முழக்கம்





ஊழல்வாதியைக் காப்பாற்றாதே என்ற முழக்கத்துடன் கிளிநொச்சி கல்வி வலயத்தின் முன்பாக நேற்றுப் பலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதற்குப் பதிலடியாக குட்டையைக் குழப்பாதே என்று கோசத்துடனும் பலர் எதிர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கிறிஸ்தோபர் கமலராஜனை இடம்மாற்றக்கோரியே இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது. ஊழல்வாதியை காப்பாற்றாதே, ஆளுநரே நடவடிக்கை எடுக்காது ஏன்? போன்ற பதாகைகளையும் ஏந்தியிருந்த போராட்டக்காரர்கள் அதே விடயங்களை கோசமாகவும் எழுப்பினர்.

போராட்டத்தில் சில டசின் கணக்கானவர்கள் கலந்துகொண்டிருந்தனர். அவர்களும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்தவர்களே போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து குட்டையை குழப்பிவிடாதே என்ற பதாகையை ஏந்தியவாறு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு ஆதரவாகக் கிளிநொச்சி வலயத்தைச்சேர்ந்த அதிபர்கள்,





உத்தியோகத்தர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் சேர்ந்து ஓர் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 20 பேர் வரையில் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர். (113)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.09.2023இல் வெளியிடப்பெற்றது.